பதிவு எண் 2041

மகாத்மா காந்தி வாழ்க.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு $1\frac{1}{2}$ அணா }



வருட சந்தா முன் பணம்	...	ரூ 3—0
6 மாத சந்தா ,,	...	ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,,	...	ரூ 4—0

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ ஞு ஆவணி மீ 5 உ (21—8—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 17.

மின்சார ரசம்.

வேத அபூர்வமான மருந்து! ஆச்சரியகரமான தவா!

இதற்கு இயற்கையாக ஒரு வித மின்சார சக்தியுண்டு
உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.
பத்தியமில்லை. அநுபான மில்லை.

மின்சார ரசம் சகல வியாதிகளுக்கும் ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று அநுபவ சிந்தாந்தமாகி ஜனங்கள் தேர்ந்தெடுத்து கையாண்டு வரும் அமிர்த சஞ்சீவியாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம் மின்சார ரசம் கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியம் இராது. இது இவ்வுலகுக்குள் ஒப்புயர்வற்ற பரம ஔஷதமாகும். மனிதன் தலை முதல் கால்வரையில் வரும் சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற தென ஜகத் பிரசித்திபெற்றது. துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். குழந்தைகள் முதல் வயோதிகள் வரையில் ஸ்திரிகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில் கிடையாது. எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். உலகத்தின் நாலு திசைகளினின்றும் ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டிருப்பதே இதற்கு போதிய சான்றாகும். இன்றைக்கே எழுதுங்கள் உங்களை ஆச்சரிய முறச்செய்யும். கைகண்ட மருந்து. உண்மை தெரிய ஒரே முறை பரீட்சியுங்கள். கேட்லாக் இனும்.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

உங்கள் காலத்தையும் சிரமத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்தும்.

இது பலரும் அநுபவத்தில் அறிந்தது.

ஒரு புட்டியின் விலை ரூபா இரண்டே. தபால் சார்ஜ் வேறு.

விலாசம்:—மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.

தந்திவிலாசம்:—"Rasamco"

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஞு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

தமிழ் புக்கீப்பிங்.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம். விலை ரூபாய் 1.

தே. ஆறுமுக செட்டி,
முதலியாரப் பேட்டை, புதுச்சேரி

இப்பழனியில் அநேக நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பரிசுகளும் பெற்று தீராதென கைவிடப்பட்டவியாதிகளை எல்லாம் சௌக்கியம் செய்த நமது முதல்தரமான தேவ அவுஷதங்கள்.

பாலாம்பிகை டிரேட் மார்க்

முதல் நெம்பர் தங்க பற்பம்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது!!!

அதிக வயதாலும், பலஹீனத்தாலும் பலவித துர் அப்பியாசத்தாலும் சோர்ந்து போனதும் இழந்து போனதுமான ஆண்மையைக் கெட்டிப்படுத்தி சப்த தாதுக்களுக்கும் வலுக்கொடுத்து இல்வாழ்க்கையில் அதிகஇன்பத்தை உண்டுபண்ணி புத்திர சந்தானத்தை கொடுப்பதில் இதற்கு மிஞ்சின ஔஷதம் இல்லை. பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம். தங்க பற்பத்தை மகா வில்வாதி லேகியத்துடன் அனுபானமாகச் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

முதல் நெம்பர் பற்பம் 50-நாள் விலை ரூபாய்	36—0—0	
இரண்டாம் நெம்பர் பற்பம் 50 நாள் விலை	20—0—0	[தபால் சார்ஜ் பிரத்தியோகம்]
மேற்படி 25-நாள் விலை	10—0—0	
அனுபானத்துக்கு மகாவில்வாதி லேகியம் 1 டின் ரூ.	10—0—0	

அசல் வெள்ளி பற்பம்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

நமது அசல் வெள்ளி பஸ்பம் நாட்பட்ட அஸ்தி வெட்டை நீரோடு இந்திரியம் உடைந்து விழுதல் அதில் ஈ, எறும்பு மொய்த்தல், சினுக்கிரும் பல், தும்மல் விழுதல் வெட்டை வாய்வு இடுப்பில் வாய்வு தங்கியிருத்தல், திரேகம் இளைத்து சதா காலம் ஜுரம்போல் சூடு தாங்கி யிருத்தல் கால் கை கண் முதலான இடங்களில் எரிச்சல் உண்டாகி தலைமாற்றி சுற்றல் இவைகள் கண்டிப்பாய் நிவிர்த்தியாகும் திரேகத்திற்கு நல்ல பலத்தையும் தாது புஷ்டியையும், நல்ல இரத்த ஓட்டத்தையும் உண்டு பண்ணுவதில் இதற்கு நிகரான மருந்துகள் கிடையாதுஇதை மதனகாமேஸ்வரிலேகியஅனுபானத்தில் சாப்பிடவேணடும்.

ஒரு மண்டலம் (48-நாள்) உபயோகிக்கக்கூடிய பஸ்பம் விலை ரூபாய்		15—8—0	
½ மண்டலம் (24 நாள் உபயோகிக்கக்கூடிய பற்பம	விலை	7—8—0	தபால் சார்ஜ் பிரத்தியேகம்
மதன காமேஸ்வரி லேகியம் 1-சேர் டின்	விலை	8—0—0	

நீரிழிவுக்கு அப்ரேக்செந்தூரம்

வயது 40-க்கு மேல் வாழ்க்கைக்குள்ள கருவி கரணங்கள் சற்று இளகும். அப்போது மூத்திரப்பை பலன் அற்று ஜனனேந்திரியம் நீற்றுப்போய் இன்னும் பல காரணங்களால் மூத்திரப்பெருக்கு உண்டாகி சரீரம் மெலிந்து ஜீவனை விட்டுவிட வேண்டியிருக்கும் நிலைமையில் நீரிழிவு வியாதியினால் இறந்து போகிறார்கள் என்கிறார்கள். நீரழிவுக்கு நமது அப்ரேக்கு செந்தூரம் சாப்பிட்டால் அது குண்டிக்காய் மூத்திரப்பை முதலிய கருவிகளுக்குப் பலம் கொடுத்து ரட்சிப்பதுடன் நீரிழிவினால் ஏற்படும் சகல கோளாறுகளையும் நிவர்த்திசெய்து நல்ல மேனியை உண்டுபண்ணி சந்தோஷத்தில் வைத்து வளர்த்தும் அதிமதுரப்பால் ரஸாயனத்தில் சாப்பிட வேண்டும். 20 நாள் மருந்து [அனுபான ரஸாயனத்துடன்]விலை ரூ.16-0

தாளகபற்பம்

நாட்பட்ட காசம், இருமல், க்ஷயம், ஈளை, கோழை, கஷ்ட சுவாசம் முதலிய ரோகங்களையும் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு	விலை	ரூ.	7—0—0	
2-ம் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு	விலை	ரூ.	5—0—0	[தபால் செலவு வேறு]
லேகியும் கண்டங்கத்திரி அல்லது தூதுவளை ரசாயணம் 10-நாளைக்கு	விலை	ரூ.	3—8—0	

நாகபற்பம்

மூல சம்பந்தமான எவ்வித வியாதியாயிருந்தாலும் சரி, வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தும். ஆபரேஷன் வேண்டியதில்லை, பெருமுறை மருந்து.

முதல் நெம்பர் பற்பம் புட்டி 1-க்கு	விலை	ரூ,	10—0—0	
2-ம் நெமபர் பற்பம் புட்டி 1-க்கு	விலை	ரூ.	6—0—0	தபால் செலவு வேறு

நற்சாட்சி:—பழனி சற்குரு மகாதேவஸ்வாமிகள் சித்த ஆயுள்வேத பண்டிதர் ஸ்வாமிகள் தயார் செய்யும் தங்கம், தாம்பரம், வெள்ளி பவளம், முத்து, அயபற்ப செந்தூரங்கள் மிகவும் உயர்ந்த முறைகளால் தயார் செய்யப்படுகின்றன. சுமார் 1 வருஷ காலமாக என் பேத்திக்கு இருமல் வியாதி கண்டு கபத்தினாலும் சுவாசத்தினாலும் கஷ்டப்பட்டும, அநேக டாக்டர்களால் கைவிடப்பட்ட வியாதியை ஸ்வாமிகள் பிறர் ஆச்சரியப்படத்தக்க விதமாய் சௌக்கியம் செய்து விட்டார். இவருடைய அபார சக்தியை பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வதில் மிகவும் சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன். L கல்யாணராமய்யர் ரிடயர்டு தாசிலதார் அண்டு சிவகிரி திவான்.

அய்யா எனக்கு 4 வருஷகாலமாய் ஒரு நாளைக்கு 35 தரம் குறையாமல் மூத்திரம் இறங்குவதும் மலம் தீய்ந்து ரெத்தத்துடன் இரண்டு மூன்று தினத்துக்கு ஒரு தரம் இறங்குவதும், திரேக அசதியும், தலை மயக்கமும் இன்னும் அநேக வியாதியுடன் கஷ்டப்பட்டு இம் மலாய் நாட்டில் அநேக மருந்து சாப்பிட்டும்! ஊசி மூலியமாக திரேகத்தில் மருந்து செலுத்தியும், சவுகரியப்படாமல் கஷ்டப்பட்டு இருக்கையில், சென்னையில் பிரசுரித்து வெளிவரும் (தமிழ் நாடு பத்திரிகையில்) மேற்படி சுவாமியின் விளம்பரத்தைப் பார்த்து கடிதத்தின் மூலம் தெரிவித்தனன். எழையின்மீதில் கிருபையுடன் தாங்கள் அனுப்பிய 24 நாள் தங்க பற்பமும், 24 நாள் நாகபற்பமும், 24 நாள் அப்ரேக் செந்தூரமும் வகைக்கு 1 அரிசியிடையாகச் சேர்த்து காலை மாலை இருவேளையும் மேற்படி பற்பங்களுக்கு அனுபானமாக அனுப்பப்பட்ட மஹா வில்வாதி லேகியத்தில் வைத்துச் சாப்பிட்டு. தங்களால் அனுப்பப்பட்ட சந்தனாதி தைலத்தில் ஸ்நானம் செய்து வந்தேன் எனக்கு மேற்கண்ட வியாதி முற்றிலும் சுகம். மேற்படி சுவாமியுடைய ஔஷதங்கள் சாப்பிடுவதற்கு. குமட்டல், வாந்தி முதலியன இல்லை.. ருசியுடன் கூடியது. பத்தியம் தவறினால் ஒரு தொந்திரவும் செய்யாது. எந்த தேசத்திலிருந்தும் தருவித்துச் சாப்பிடலாம். அயல் நாட்டு வியாதியஸ்தரின் பேரில் அவர் வைத்துள்ள அன்பு நேரில் தாங்களே தெரிந்து கொள்ளக்கூடும்! மேற்படி சுவாமிக்கு கடவுள் நீண்ட ஆயுளைக்கொடுப்பாராக! அ. ஆறுமுகம் நெ, 11 கேப்பிங்ரோடு கோலாலம்பூர், மலாய்நாடு.

சற்குரு மகாதேவஸ்வாமிகள் மகா ஆபத்தான வியாதிகளை சொஸ்தப்படுத்துவதில் திறமை வாய்ந்தவர் என்று நற்சாட்சி கூறுவேன். அவர் அளவு கடந்த சமத்துவம்வாய்ந்தவர் வியாதியஸ்தர்களுக்கு ஆச்சரியப்படத்தக்க சொஸ்தம் கொடுப்பவர், சிகிச்சை செய்ய வேண்டியவர்களுக்கு வேண்டிய சகல நல்ல குணாதிசயங்களும், அடையப்பெற்றவர். அநேக காலமாக ஸ்வாச காசத்தில் கஷ்டப்பட்டேன். வியாதியின் குறி தென்படும்போது உயிர் துறந்து மறு உலகம் போவேன்போல் உட்கார்ந்திருந்தேன். நான் இறக்கப்பட்டுப்போவேன் என்ற கடைசி காலத்தில் கடவுள் இந்த சுவாமிகளிடம் என்னைச்சேர்த்தார். குணப்படுத்த நிரம்பப் பணம் வேண்டிக் கொண்டவராயிருந்தாலும் சம்மதித்து நீண்டகால அவதியை சொஸ்தம் செய்தார். தாளக பற்பத்தை கடுக்காய் ரசாயனத்தில் கொடுக்க அது தேவையான குணத்தைக் கொடுத்தது. நான் ஆச்சரியப் படும்படி 1 மண்டலத்தில் குணம் வாய்ந்தது. நான் குணம் பெற்று இப்போது அநேக வருஷம் உலகில் வாழ இருக்கிறேன், கஷ்டப்படும் அநேகருக்கு தேவையான சமயம் உதவியாயிருக்க அவர் ஆசிர்வதிக்கப்பட வேண்டுமாக கடவுளை வணங்குவேன். (Sd.) K. V. வேங்கடேஸ்வர அய்யர்,

பழனி, 19-2-1925

ஜவுளி வியாபாரம்

மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும். விவரமான கேட்லாக்குக்கு இன்றே எழுதவும்.

தந்தி விலாசம் "சற்குரு"! பழனி } **ஸ்ரீமத் சற்குரு மஹாதேவ சுவாமிகள்,**

சதானந்த மெடிகல் ஹால் பழனி, (தென்னிந்தியா)

மலாய் நாட்டிற்கு நமது ஏஜண்டு, M. E. நாயுடு அவர்கள் டிரஸ்ஸர், 86 டேலுக், கோடங்குரோட், (கிளாங்கு,) KLANG F. M. S.

அவியல்.

9-ம் பாகம்.

தாழ்ந்த ஜாதிக்காரர்களின் விண்ணப்பம்.

(கைவல்ய சாமியார் எழுதினது)

சந்திரன்—என்னருமை வசந்தா, தாழ்ந்த ஜாதியாரின் விண்ணப்பத்தில் விட்ட மற்ற பாகத்தையும் சொல்லுகிறேன். ஏகாதிபத்தியத்திற்கு உதவி செய்த ஜாதிகள் நாங்களே. ஒழிய மேடையிலும் பந்தலிலும் முனிசிபாலிட்டியிலும் உபசார பத்திரம் பெற்று விருந்துண்டு சுயராஜ்ஜியம் கேட்கும் உயர்ந்த ஜாதியார்களல்ல. இவர் உயர்ந்த ஜாதிகளென்று சொல்லிக் கொள்வதற்கு, முன்னிருந்த புத்தியில்லாக் கொடுமையான ராஜாக்களும், இவர்களுடைய சுயநலமும், இப்பொழுது பூர்வீக வழக்கம்போல போகவேண்டுமென்ற உன்னுடைய அவர்கள் பெற்றுக்கொள்ளும் சட்டமும், எங்கள் ஏழ்மைத்தனமுமே காரணம். நாங்களும் அறிவையடைந்து இவர்கள் பரட்டைத் தெரிந்துவிடப் போகிறோமென்று ஆதி முதற்கொண்டே எங்கள் கல்வியைத் தடுத்துக்கெடுத்து எங்களை ஒதுக்கியே வைத்துவிட்டார்கள். பல தலைமுறை செல்லச்செல்ல நாங்களும் கடவுளுக்கும் அவர்கள் பிரபுத் தன்மைக்கும் பயந்து அது சரியென்றே நம்பியிருந்தோம். எங்களில் ஒவ்வொருவர் ஒவ்வொருகாலத்தில் இந்தக் கொடுமையான அனீதியை ஆட்சேபித்து வந்திருந்தாலும், அறிவிலா கொடுங்கோல் அரசரின் ஆதிக்கத்தை வகித்த இவர்கள் பிரபுத்தன்மையில் அவைகள் பிரயோஜனப்படவில்லை. இப்பொழுதாவது உன்னுடைய பிரிடிஷ் நீதியில் இக்கொடுமைகளைப் போக்க எங்களில் அநேகர் எங்களிடம் அன்பு பூண்டொழுகும் சிலருடன் சேர்ந்து எங்கள் அறிவின் விருத்திக்கு ஏதாவது நன்மையை உண்டுபண்ணிக் கொள்ளலாமென்றால் எல்லா உயர்ந்த ஜாதிக்காரர்களும் தடையாக இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுதிருக்கும் நிலைமைக்கு பிரசங்க மேடைகளிலும் பத்திரிகைகள் மூலகமாகவும் எங்களுக்கு பரிதாபம் காட்ட ஒவ்வொரு கட்சிகளும் நிர்பந்திக்கப்படுகிறது. மனிதரை இயற்கை மிகவும் நெருக்கமாகப் பின்னியிருப்பதால் நீ பிறரை அடித்தால் அந்த அடி உன்மீது தவறாமல் திரும்பிவருமென்பதை அறிவின் கண்ணுடையோர் அறிவர். மனிதன் கண்டுபிடித்த உண்மைகளிலே மிகப் பெரியது தருமவிதி. அதுயாதெனில், எவ்வளவு மனிதன் பிறருக்குள்ளே தன்னைக் காண்கிறானோ அவ்வளவு உண்மை நிலையடைகிறானென்ற ஆச்சரியமான ஸத்யத்தைக் கண்டுபிடித்த செயலேயாம். இதற்கு உள்ளத்திலே விளையும் பயன் மாத்திரமேயன்றி நமது வாழ்வில் ஒவ்வொரு சாகையிலும் நற்பயன் உண்டாகிறது. குருட்டுத்தனத்தை எந்த ஜாதியார் தேசபக்தி மதமென்று யத்தனத்தாலே பயிற்சி செய்கிறார்களோ அவர்கள் க்ஷீணித்து நோய், பஞ்சம் இவைகளால் அடிமைப்பட்டு மரணத்தை யடைவார்கள். இந்த விஷயமான ஸங்கடத்திற்கு மூலம் யாதென்று அவர்களே சிலசமயம் கேட்டுக்கொள்ளவும் செய்கிறார்கள். ஸ்வராஜ்ஜியம் நமக்கில்லாமையே மூல காரணமென்று உடனே மேடைமேடையாகவும் சொல்லுகிறார்கள். சுயராஜ்ஜியமிருக்கையில் தான் எங்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்தார்கள். கொச்சி, திருவனந்தபுரம், மைசூர் முதலிய சுயராஜ்ஜயம் நடத்துமூர்களில் எங்களைப் பண்ணும் அக்கிரமங்களும், கொடுமையும் முப்பத்திமுக்கோடி தேவர்களும், தக்ஷமாறாலும் சகியாது. அந்த தேசங்களில்தான் கொடுமை பொறுக்காமல் எங்கள் சமூகம் அன்னியமதப்பிரவேசம் செய்வது அதிகம். எல்லா ஜனசமூகமும் முன்னேறிச் செல்லும் இந்த காலத்தில் இங்கிலீஷ் நாகரீகத்திற்கு இந்து ஆசாரங்களை உதைத்துத் தள்ளிவிட்டு ஓடிவந்த காலத்தில், பிராமணப் பெண்கள் மகமதியர்களையும், வெள்ளைக்காரர்களையும் விவாகம்செய்துகொண்டு இயற்கைகாதல் வேர், மதத்திற்கும் ஆசாரத்திற்கும், விவாகத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொல்லுமிந்த காலத்தில், சாஸ்திரிகளும், ஆசாரிகளும் எங்களுடன் உண்டு எங்கள் விருந்திற்கு இலக்கணம் கற்பிக்குமிந்த காலத்தில், தயையில்லாப் படிப்பு, பக்தி, ஒழுக்கம் மூன்றுமில்லாத கோவிற் குருக்களுடைய காலில் பணத்தைக் கொட்டுவதினால் உண்மைக்கும் கருணைக்கும் அருகே செல்லமுடியாதென்று 'குடி அரசு' கூறுமிந்தக்காலத்தில் கல்வி பரப்பப்படவேண்டும். வைதீகக் கொடுமை நீக்கப் படவேண்டும்' ஜன சமூகத்தில் கொடுமை உதவாது. ஸ்வதந்திரத்தைக் கொடுப்பதற்குத் தயாரில்லாத எவனும் ஸ்வதந்திரத்திற்கு அருகனல்லன் என்று நாய்க்கன் சத்தம்போடும் இந்தக்காலத்தில் விஸ்தாரமான ஒரு தேசத்திலுள்ள எங்கள் ஆண்மை முழுதுமே நசுக்கி அந்த தேசத்தை நான்கெல்லையிலும் பக்கவாத நோய் கண்டது போலே செய்துவிட்ட முன் கூறியவர்கள்போல் எல்லா அறிவும யோக்யதையும் நிறைந்த சென்னையில் இந்த காலத்திலிருப்பதென்றால் என்று நாம் கடைத்தேறுவது. பச்சையப்பன் பள்ளியில் எங்களைச்சேர்த்துக்கொள்ளுவதற்கு எங்கிருந்து சுயராஜ்ஜியம் வரவேண்டும். எந்தத் தெய்வத்தின் சம்மதம் வேண்டும். ஏதேனும் பெரிய அனுமதி உண்டாயின் அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது. லோபத்தினால் தனக்கே நஷ்டம் உண்டாகுமென்று உணராத இவர்கள் சுயராஜ்ஜியத்திற்கு என்ன திறமையும் பொறுப்புமுடையவர்கள்.

இந்துக்களில் உயர்ந்த ஜாதி என்ற பார்ப்பானுக்கும் எங்களுக்கும் சாஸ்திர சம்மதமாக நெருங்கின பொருத்தமுண்டு. பாப்பானுக்கு உள்ள யோக்யதையில் எங்களுக்கும் பங்கு உண்டு. எங்கள் பெரியவர்கள், பாப்பாரும் நாங்களும் தாயாதிகள் என்று கர்ண பரம்பரையாக சொல்லுவதுண்டு. இதேமாதிரி மலையாளத்து நம்பூதிரி பார்ப்பானுக்கும் தாழ்ந்தஜாதிக்காரர்களென்போர்களுக்கும் சம்மந்தக்கதைகளுண்டு. நம்பூதிரிப் பிராமணப்பெண்கள் கணுக்கையிலிருந்து முழங்கை வரையிலும் வளையல் அணிவார்கள். மலையாளத்தில் "தாழ்ந்த" ஜாதியான செரமர் என்ற ஒரு ஜாதி மட்டும் தங்கள் கையில் அதேமாதிரி வளையல் அணிகிறார்கள். நம்பூதிரிப்பெண் அணிவது பொன். மற்றவர்கள் அணிவது பித்தளை. இதுதான் வித்தியாசம். எங்கோ கிடக்கப்பட்ட நீங்கள் ஆரியன் என்ற சொல்லும்போது எங்கள் பழைய கதைகளிலும் சிறிதுண்மைக்கு ஆதாரமுண்டு. பார்ப்பார்கள் ஆதியில் உயிரோடு கூடின மாட்டைத் தின்பார்கள். நாங்கள் செத்த மாட்டைத் தின்போம். அவர்கள் மறை படிப்பார்கள். நாங்கள் பறை யடிப்போம். அவர்கள் பிர்மாவின் முகத்திலிருந்து பிறந்தார்கள். நாங்கள் பிர்மாவுக்கு நேராய்ப் பிறந்தவர்கள். வியாசன், காசிபன், வசிஷ்டன், பராசன் முதலிய ரிஷிகள் அவர்கட்கு மூலபுருடர்கள். சாம்புவான், திருவள்ளுவர், கபிலர், பக்கண்ணர் வீரவாகு முதலிய சித்த புருடர்கள் எங்களுக்கு மூல புருடர்கள். பாப்பாரவேஷமாக சுவாமி வந்திருக்கிறார். எங்கள் ஜாதி வேடத்துடன் அவர்கள் குரு சங்கராச்சாரிக்கு உபதேசமும் செய்திருக்கிறார். ஒவ்வொரு பாப்பான் வீட்டிலும் அக்கினி எரிந்துகொண்டே இருக்கவேண்டும், அக்கினியே அவர்கட்கு தெய்வம். அந்த அக்கினியை எங்கள் பெண்களும் அடுப்பு மூட்டுகையில் கும்பிட்டுத்தான் நெருப்பெரிப்பார்கள். இவர்கள் பெரியவர்களைவிட எங்கள் பெரியவர்கள் எத்தனை காலத்திற்கோ முற்பட்டவர்கள். விஷ்ணுவின் பத்து அவதாரமும் சிவபெருமானின் எல்லா அவதாரமும் எங்கள் பெரியவரான சாம்புவனுக்குத் தெரியுமென்று ராமாயணம் சொல்லுகிறது. இவர்கள் ரிஷிகளின் தாய்மார்களில் அநேகர் எங்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள். இதெல்லாமிருக்க எங்களைச் சண்டாளர்களென்று சொல்லுகிறார்கள். வேத சுருதிகளில் சண்டாளனென்கிற பதமுமில்லை. ஜாதியுமில்லை. பிராமணத்தன்மையிலிருந்து நீங்கின பாப்பானுக்கு சண்டாளன் என்னும் பதத்தை ஸ்மிருதிகளில் உபயோகித்திருக்கிறார்கள். இதைக்காக்கிநாடாவில் பாப்பார சாஸ்திரிகள் கூட்டத்தில் தலைமை வகித்தவர் எடுத்தும் சொன்னார். இங்கிலீஷ் ராஜாங்கம் வந்து 200 வருடமாயிற்று. நூற்றுக்குப் பத்துப்பேர்கூடப் படிக்கவில்லையே. பிரிடிஷ் அரசாட்சி வந்தும் கல்வியைப் பற்றி கவனிக்கவில்லையே. உலகத்திலெல்லாவற்றையும் விட நம் தேசத்தில்தான் கல்விக்காக செலவுசெய்யும் பணம் அதிக சொற்பம். இந்த அநியாயமுண்டா? எல்லோரும் ஒன்றாய்ச் சேரவேண்டும். வரவு செலவு மெம்பரைக் கண்டிக்கவேண்டும். சவர்ன்மென்டை ஸ்தம்பிக்கச்செய்யவேண்டுமென்று பேடையில் சத்துகிறவர்களும், கனைத்துக் குதிக்கிறவர்களும், பிட்டிஷன் எழுதுகிறவர்களும், தந்தி கொடுக்கிறவர்களுமான இவர்கள் தான் எங்கள் தேசத்தில் மேதாவிகளும, தலைவர்களும், எங்கள் தேசத்தை சீர்திருத்தி சுயராஜ்டம் வாங்கிக்கொடுப்பவர்களும். தேசோபகாரியுமானவர்களாம். எங்களைப் பச்சயப்பன் பள்ளியில் சேர்க்கமாட்டேன் என்கிறார்களே, எங்களுக்கு இவர்கள் கொடுக்கும் கல்வியில் அந்த வீரமெல்லாம் எங்கோ ஆராயிரமையில் தூரம் போகும் ஆண்மை அடுக்களைக்குள் போகவில்லையே. ராஜாங்கத்தாரின் நீதி எங்கே? முறை எங்கே? கடமை எங்கே? என்று கத்தும் சப்தம் குருக்களுக்கும் கோவிலுக்கும் அடிமைப்பட்டு எங்கள் விஷயத்தில் அடைத்துப்போய் விட்டதே. ஒரு முனிசிபல் கவுன்சில் ஸ்தானத்திற்கு மீட்டிங்கு எத்தனை? பணச்செலவு எத்தனை? கண்டனமெத்தனை? வியாசமெத்தனை? துண்டுப்பிரசுரமெத்தனை? நடையெத்தனை? தந்திரம் ஏமாற்று வழக்கு எத்தனை? விவகார வியாஜ்ஜியமெத்தனை? எங்கள் விஷயத்தில் ஏதாவது கேள்வியுண்டா? அவரவர்கள் மனதிலே தமக்கென்னவென்று தீர்மானம்பண்ணி ஒருவர் பேரில் இன்னொருவர் குற்றம் சுமத்தவும் செய்கிறார்களே அல்லாமல் வேறு என்ன நடக்கிறது.

ஒரு பிரதேசத்தில் மஹத்தான பிரிடிஷ் ஜாதி என்று நியாயப் பெயர் பூண்ட ஜாதியொன்றிருந்து எங்கள் தேசத்திற்கு சுயராஜ்ஜியம் கொடுக்கவேணு மென்று நினைத்தாலும் எங்களியல்பு தெரிந்த இங்குள்ள வெள்ளைக்காரர்கள் அங்குள்ளவர்களின் காதைக் கடிக்கவேண்டாம். எங்கள் பாவம் அங்குபோய் அவனுக்குள் நுழைந்து அவர்கள் நல்லெண்ணத்தையும் கெடுக்கும். படித்தவர்களும் பண்டிதர்களும் திருவள்ளுவர் குறளையே மேற்கோள் காண்பிப்பார்கள். அதில் பிரமாணம் சொல்லுவதே பெருமை. குறள் தெரியாதவன் வித்வானல்ல. அந்த நூலில்லாவிட்டால் தமிழுக்குப்பெருமையில்லை. இந்த நூல் எங்கள் முன்னோர்களுடையது. உயர்ந்த ஜாதித் தமிழர்களுக்கு அறிவை உண்டுபண்ணி இனியும் அறிவுப்பெறக் காரணமாயிருக்கும் நூலுமதுவே. இந்த நன்றியைக்கூட மறந்து எங்களை பச்சையப்பன் பள்ளியில் சேர்த்துக்கொள்ள இனியும் ஆலோசிக்கிறார்களாம். இப்பேர்ப்பட்ட மனப்போக்குடையவர்களுக்கு சுயராஜ்ஜியம் எதற்கு, வந்தாலும் எப்படி நிர்வகிக்கமுடியும். எங்களை மகமதியர்களும்

கிருஸ்தவர்களும் வருந்தி அழைக்கிறார்கள், அன்போடு அணைத்துக் கொள்ளுவார்கள். நாங்கள் போய்விட்டால் உயர்ந்த ஜாதியார் அந்நியராய்ப் போய்விடுவார்கள். குளிக்கவும், மதக்குறிபோடவும், நடிக்கவும், பூசாரி ஆச்சாரி குருக்கள்புரோகிதன் காலில்விழவும், தின்னவும்தன்னிடம் கிடைத்தவனை ஏமாற்றவும் தன்னில் தாழ்ந்தவர்களை ஏறி மிதிக்கவும், தன்னில் மேற்பட்டவன் பாத தூளியை சிரசிலணியவும், உன்சட்டத்தை ஒட்டி உன்னைத் திட்டவும், நீ இந்த உன் இஷ்டம் போல் ராஜாங்கம் செய்ய உனக்கு உதவிசெய்யவும்தான் இவர்கள் பழகியிருக்கிறார்கள். நாங்களெல்லாம் அன்னிய மதத்திற்குப் போய்விட்டால் இவர்கள் சுவாமிகளெல்லாம் எமபட்டணத்திற்குப் போகவேண்டும். இவர்கள் பூசை ஆராதனைஎல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும் இல்லையேல் நீ இங்கேயே இருக்கவேண்டும். நீங்களும் போகவேண்டும். எங்களைப் பள்ளியிலும் சேர்க்கமாட்டார்களாம். இதுஎன்ன அலோசனை, குறைவும் அறியாமையும் இந்த இடத்தில்தான். அரசியல் தொண்டாற்றவேண்டுமென்று சொல்லுகிறவர்களை 'குடியரசு' புரட்டென்றும் அறியாமையென்றும் சொல்லுகிறது. சமூகத்தொண்டே வேண்டும். அதிலிருந்துண்டாகும் சுயமரியாதையால் சுயராஜ்யம் தானே வந்துவிடுமென்றும் வற்புறுத்துகிறது. பல நூற்றாண்டுகளாக நீசத்தன்மையான கோட்பாடுகள் ஜனங்களுக்குப் புகட்டப்பட்டு வந்திருக்கின்றன. அதிலும் எங்களுக்கு யாதொரு அதிகாரமாவது பாத்தியமாவது இல்லையென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். எங்களை, மேல் ஜாதியார் "நீங்கள் மனிதப் பிரஜைகளேயல்லீர்" என்று சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படி பல நூற்றாண்டுகளாக நாங்கள் பயமுறுத்தப்பட்டு கடைசியில் எங்கள் நிலைமை மிருகத்திலும் கீழாய் விடுகிறது. ஆத்மாவைப் பற்றியோ, கடவுளைப்பற்றியோ மதத்திலுள்ளதைப் பற்றியோ சிரவணம் செய்வதற்கு உயர்ந்த ஜாதியார் உங்களுக்கு இடம் கொடுப்பதில்லை. உங்களுடைய இங்கிலீஷ் நாகரீகத்தில் கெட்டது எது உண்டோ அவையனைத்தும் பழகி, அவர்கள் வீட்டுக்குள் புகுந்து, பணத்தையும் பாழ் பண்ணி, பல நல்ல பழக்க வழக்கங்களைப்போக்கி, தேகத்தையும் கெடுத்துசெல்வதானல் [illegible]ரையே ஓட்டாண்டியாக்கிக் கொண்ட இவர்கள் பள்ளியிலும், வீதியிலும் நாங்கள் போனால் தீட்டு வந்துவிடுமாம். இவர்கட்குத்தானா சீர்திருத்தம் கொடுப்பதாக பாசாங்கு செய்கிறீர்கள். உலகத்திலுள்ள எல்லாமதங்களும் எங்களைச்சேர்த்துக்கொள்ளவும் மனிதர்களாக நினைக்கவும் ஒத்துக்கொள்ளுகிறது. எங்களிந்துமதமட்டும் எங்களைத்தள்ளச் சொல்லியிருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். எங்களைத்தள்ள வேத சுருதிகள் விதிக்கவும் இல்லை, இதிகாச புராணங்களிலுள்ள தெய்வங்களும், அதையுண்டுபண்ணின பெரியவர்களும் எங்களுக்கு பந்துக்கள். சாஸ்திரங்களில் எங்களை கோவில்களிலாவது, வீதியிலாவது விடப்படாதென்று எங்கும் எழுதவில்லை. மகத்தான பிரிடிஷ் நீதியிலோ, விக்டோரியா மஹாராணி இந்தியர்களுக்கு அளித்த ராஜ விளம்பரத்திலோ, உலகங்கள் அரசாங்க சபைத்தர்க்கத்திலோ இந்தியர்கள் உங்கள் வீதியில் குடியிருக்கவேண்டாமென்ற சொல்லியிருக்கிறதா? இப்பொழுதேன் இந்தியர்களை எங்குபோனாலும் விரட்டுகிறீர்கள்? உங்களுடைய சுயநலமும் எங்கள் பலக்குறைவுமல்லவா காரணம். அதுபோல எங்கள் உயர்ந்த ஜாதியார்களின் சுயநலமும், எங்கள் அடிமைக்குணமும், அவர்கட்கே நீ கொடுக்கும் உத்தியோகமும், எங்கள் காரியத்தில் உங்கள் அலக்ஷியமும் உன் சட்டமுமே காரணம். விண்ணப்பம் நீண்டுவிட்டது. இனியும் ஒன்று சொல்லி எங்கள் கட்சியை முடிக்கிறோம். உயர்ந்த ஜாதி இந்துப் பெண்கள் வைர விலையும், சாயப்பட்டுப் புடவை விலையும் ஏறிவிட்டதே என்று ஏங்கியிருந்த காலத்தில், கப்பல்துறையிலும், ரயில்வே ஸ்டேஷனிலும் கதறிக்கொண்டிருந்தது எங்கள் பெண்கள் என்பதை ராயல் கமிஷனுக்கு நீங்கள் சொல்லவேண்டும். மெஸபெட்டோமியா சூயஸ் கால்வாய், ஈஜிப்ட் முதலிய இடங்களில் உங்களுக்காக உயிரை விட்ட எங்கள் கல்லறையை ராயல் கமிஷனைப் பார்த்து வரச் சொல்லுங்கள். ஜனசமூகத்தில் சுயமரியாதை எங்களுக்கு உண்டாகிறவரையிலும் நீ காத்திருப்பாய் என்பது எங்களுக்கும் தெரியும். சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவும் சொல்லுகிறீர்கள். என்றாலும் எங்கள் நாட்டு உயர்ந்த ஜாதிக்காரருடைய புத்திக்குப்படுவதில்லை. சிலருக்குப் படுவதையும் பார்க்கிறோம். அதுதான் எங்கள் தேசவிடுதலையின் அறிகுறிக்கு அடையாளம்.

"பாவி" டயர்.

பஞ்சாபில் நடந்த படுகொலைக்கு காரணஸ்தர்களில் ஒருவரான ஜனரல் டயர் துரை செத்துப்போனதற்கு அநேக பத்திரிக்கைகள் சந்தோஷம் கொண்டாடுவதன் மூலமாய் டயரை பாவியாக கண்டபடி வைது எழுதி வருகின்றன.

செத்துப்போன ஜனரல் டயர் துரையை விட கொடுமையானவர்கள் நம் நாட்டில் உயிரோடு இருந்து கொண்டு பிள்ளை குட்டிகள் பெற்றுக்கொண்டு சுகமாய் வாழுகிறார்கள். இந்த டயர்களைப்பற்றி எந்தப்பத்திரிகையாவது எழுதுகின்றார்களா? ஒன்றுமேயில்லை. காரணம் என்ன. நமது பத்திரிகைகளுக்கு பெரும்பாலும் சுயபுத்தி கிடையாது. ஒரு பார்ப்பனப் பத்திரிகை வழி காட்டினால் அதை குரங்குப்பிடியாய் பிடித்துக்கொண்டு "கங்காதரா மாண்டாயோ கங்காதரா மாண்டாயோ" என்று கத்த வேண்டியதுதான்.

"பாவி" டயராவது அவா துவருப்பு பெண் மீது கல்லுப் போட்டார்கள் என்கிற காரணத்தைச் சொல்லி அந்த வீதியில் வயிற்றினால் ஊர்ந்து கொண்டுபோ மூக்கினால் உரைத்துக்கொண்டுபோ என்பதான நிபந்தனை போட்டாவது அவர்களுக்கு இஷ்டமான தெருவில் போகும்படி இடம் கொடுத்தார். நமது நாட்டிலிருக்கும் படுபாவி டயர்கள் நாம் ஒரு குற்றமும் செய்யாமல் ஒருவன் மீதும் கல்லுப்போடாமல் இருப்பதுடன் அவர் கூட்டத்திற்கும் காம நன்றாக சோறு போட்டும் பணம் கொடுத்தும் வரும்போதே, அடியோடு தெருவிலேயே போகக்கூடாது. கிட்டத்திலேயே வரக்கூடாது என்கிறார்களே இதைப்பற்றி யாருக்காவது உறைக்கிறதா. இதனால் நமக்கு அவமானமாயிருக்கிறதே என்று படுகிறதா? எந்தப் பத்திரிக்கையாவது இம்மாதிரி நடவடிக்கைகள் படுபாவி டயர் தான்என்று எழுதுகிறதா என்று பார்த்தால் இல்லவேயில்லை. "பாவிடயர்" தன்னுடைய பிறந்த நாட்டுக்காக நன்மை செய்கிறோம் என்கிற எண்ணத்தின்பேரில் நம்மை கொடுமை செய்தான். நம்முடைய நாட்டுப்படுபாவிடயர்கள் தங்கள் நாட்டையும் காட்டிக்கொடுத்து தங்கள் நாட்டாரையும் வயிற்றுப்பிழைப்புக்கு மாத்திரம் கொடுமை செய்கிறார்கள். அதோடு நம் நாட்டுப்படுபாவிடயர் கூட்டத்தார் பாவிடையர் செய்த காரியத்தையும் தாங்கிப்பேசி பெரிய பெரிய உத்தியோகமும் பெறுகிறார்கள். அதைப்பற்றியும் பேசுவாரைக்காணோம். எழுதுவாரைக் காணோம். தவிரவும் ஒருவர் செத்துபபோனபிறகு "பாவி செத்தான" என்பது அவ்வளவு மனிததத்தன்மையாகாது. அதிலும் உயிருடன் இருந்துகொண்டு அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான கொடுமைகள் செய்கிறவர்களை மூடிவைத்துக்கொண்டிருக்கிறவர்கள் இப்படிச்சொல்லுவது மிக மிக அக்கிரமமானது என்றே சொல்லுவோம்.

கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்
அல்லது
8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

"குடி நூல்"

என்ற கதர்ப்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

ஆகவே இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லாவிவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,
சர்க்கா சங்கம், ஈரோடு.

மனமறி நூல

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான அருட் சாஸ்திரம். வடமொழி நூலை ஆதாரமாகவுடையது விலை ரூபாய் ஒன்று. மு. வடிவேல் செட்டி.
110, கஸ்பான் தர்மராஜா கோவில் வீதி
புதுச்சேரி.

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை, சுயராஜ்யம் வயிற்றுச்சோற்றுரிமை"

புரசைவாக்கத்தில் வெற்றிக்கூட்டம்.

வெற்றி வீரர்களுக்கு வாழ்த்து.

சுயராஜ்யக்கட்சிக்கு சாவுமணி தலைவர்களின் முழக்கம்.

திரு. கோதண்டராம முதலியாருக்கு பேராதரவு.

சமீபத்தில் நடந்த கார்ப்பொரேஷன் தேர்தலில் வெற்றிபெற்ற, திரு. வி. சக்கரை செட்டியார், திரு. கிருஷ்ணதாஸ் லாலா, திரு. ஜி. செல்வபதி செட்டியார் முதலானவர்களுக்கு வாழ்த்து கூறுவதற்காகப் பார்ப்பனரல்லாத இளைஞர் தலைமைச் சங்கத்தின் ஆதரவின் கீழ் புரசைவாக்கம் அன்னதான சமாஜத்தில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. திவான்பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியாரவர்கள் தலைமை வகித்தார்கள். கூட்டம் மிகக் குதூகலமாக நடைபெற்றது.

திவான்பகதூர் தணிகாசலம்.

கூட்டத்தில் தலைமைவகித்த திவான்பகதூர் ஓ. தணிகாசலம் செட்டியாரவர்கள் வெற்றிவீரர்களைப் பாராட்டிக் கீழ்க்கண்டவாறு பேசினார்:—

கனவான்களே, சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் ஓட்டர்களை ஏமாற்றி வந்தகாலம் போய் விட்டது. இந்த உண்மை சமீப கார்ப்பரேஷன் தேர்தலில் நிரூபிக்கப்பட்டு விட்டது. தேர்தலுக்கு முன்னால் சுயராஜ்யம், கதர் என்று பெரிய பெரிய வார்த்தைகளை யெல்லாம் சொல்லிக்கொண்டு ஓட்டுகளைப் பெற்ற தேசபக்தர்கள் எத்தகைய தேசபக்தர்களென்பதை ஓட்டர்கள் கண்டறிந்து கொண்டார்கள். தேர்தலில் வெற்றிபெற்ற திரு. வி. சக்கரை செட்டியாருக்கும், திரு. ஜி. செல்வபதி செட்டியாருக்கும், திரு. கிருஷ்ணதாஸ் லாலா அவர்களுக்கும் நம் சந்தோஷமான வாழ்த்துகளைக் கூறவே நாம் இங்கு கூடியுள்ளோம். சுயராஜ்யக்கட்சியைச் சேர்ந்த இரண்டு சட்ட சபை அங்கத்தவர்கள், இத்தேர்தலில் தோற்றிருப்பதிலிருந்து சுயராஜ்யக் கட்சியின் சூழ்ச்சிகளை எவ்வளவு தூரம் ஜனங்கள் வெறுக்கிறார்களென்பது நன்கு விளங்குகிறது. இத்தேர்தலில் நாம் வெற்றியடைந்திருப்பது போலவே இனியும் வெற்றியடைவோம் என்று நம்புகின்றேன் என்று பேசினார். (கைதட்டல்)

பனகால் அரசர்.

பின் பனகால் அரசரவர்கள் பின் வருமாறு பேசினார்:— கார்ப்பொரேஷன் தேர்தலில் வெற்றியடைந்த திரு. வி. சக்கரை செட்டியார், திரு. ஜி. செல்வபதி செட்டியார், திரு. கிருஷ்ணதாஸ் லாலா முதலானவர்களுக்கு என் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்று பேசினார்.

திரு. சோக்கலிங்க முதலியார்.

பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தின் காரியதரிசியாகிய திரு. சொக்கலிங்க முதலியாரவர்கள் வெற்றிபெற்ற நண்பர்களைப் பாராட்டி பேசி முடித்தார்.

திரு. ஆரியா.

அதற்குப் பிறகு பார்ப்பனரல்லாத இளைஞர் இயக்கத்தின் தளகர்த்தரான திரு. சுரேந்திரநாத ஆரியா பின் வருமாறு பேசினார்:—

பார்ப்பனரல்லாதார்களெல்லாம் தொழிலாளர் கூட்டமேயாகும். நாமெல்லாரும் ஏதாவதொரு தொழில் செய்தே ஜீவிப்பவர்கள். பார்ப்பனரல்லாத சாமிகள்கூட தொழில் செய்யும் சாமிகளே (சிரிப்பு) நம்முடைய தெய்வங்களெல்லாம் தாங்கள் மாத்திரம் வேதங்களைப் படித்துக்கொண்டு நம்மைப் படிக்க வேண்டாமென்று சொல்லவேயில்லை. திரு. ஜி. செல்வபதி செட்டியாருக்கும் மற்றைய தொழிலாளருக்கும் நான் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இனி மேலாவது தொழிலாளர்கள் ஸ்ரீமானையும் ஸ்ரீமான் கோஷ்டியையும் நம்பாமலிருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறேன். தொழிலாளருக்காகத் தன் உயிரையுங் கொடுத்துவிடுவதாகத் தேர்தலுக்கு முன்னால் சொல்லி ஓட்டர்களின் ஓட்டுகளையெல்லாம் கொள்ளையடித்த ஸ்ரீமான் இப்பொழுது என்ன செய்தார்? தொழிலாளருக்கு விரோதமாகவும் தொழிலாளர் தலைவருக்கு விரோதமாகவும் சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த பக்த வத்சலு நாயுடுவைக் கார்ப்பரேஷன் தேர்தலில் நிறுத்தவில்லையா? ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த மிஸ்டர் டி. சுந்தரராவ் நாயுடு அவர்களுக்கு உடம்பு எவ்வளவோ அசௌகரியமாயிருந்தும் அதையெல்லாம் கவனியாமல் பெரம்பூருக்கு வந்து திரு. செல்வபதி செட்டியாருக்காகப் பாடுபட்டதைத் திரு. ஜி. செல்வபதி செட்டியாரும் மற்றைத்தொழிலாளர்களும் மறந்து விடமாட்டார்களென்றே நம்புகிறேன். திரு. ஜி. செல்வபதி செட்டியாரவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றதற்காக என் சார்பாகவும், பார்ப்பனரல்லா இளைஞர் சங்கத்தின் சார்பாகவும் நான் என் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். திரு. லாலா அவர்கள் இத்தேர்தலில் பார்ப்பனர்களால் ஏமாற்றப்பட்டிருப்பதால் இனியாவது அவர் பார்ப்பனர்களை நம்பாதிருப்பாரென்று நினைக்கிறேன். அதற்கடுத்தபடியாக திரு. வி. சக்கரை செட்டியாரவர்களுக்கும் என் வாழ்த்துகளைக் கூற விரும்புகிறேன். திரு. சக்கரை செட்டியார் 'டிடில்' பாபாவைத் தோற்கடித்திருக்கிறார். ஜாதி மதவித்தியாசம் பாராமல் உண்மையான ஒருவரைத் தேர்ந்தெடுத்ததற்காகப் பெத்துநாயக்கன் பேட்டை ஓட்டர்களை நான் பாராட்டுகிறேன். வெற்றிபெற்ற மூவரும் பார்ப்பனர்களைத் திருப்தி செய்வதற்காகக் கார்ப்பரேஷன் கமிஷனரைச் சதா தாக்கிக் கொண்டு குறைகூறிக்கொண்டிருப்பதையே தொழிலாகக்கொண்டிருந்த பக்தவத்சலு நாயுடுவை மிக நன்றாகத் தோற்கடித்த திரு. ஜி. செல்வபதி செட்டியாரை நான் மிகவும் பாராட்டுகிறேன். (கை தட்டல்) இனி நடைபெறப் போகும் தேர்தல்களில் ஊக்கத்துடன் உழைக்க இளைஞர் சங்க அங்கத்தினர்கள் முன் வரத்தயாரா யிருக்கிறார்கள், ஆதலால் வரப்போகும் தேர்தல்களுக்கு அபேட்சகர்களாக நிற்கும் கனவான்கள் தங்கள் தங்கள் டிவிஷனில் ஒரு எலெக்ஷன் ஆபீசை ஏற்படுத்திக்கொண்டு மும்முரமாக தேர்தல் வேலையை நாளையிலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். (கை தட்டல்)

டாக்டர் நடேசன்.

தலைவரவர்களே, ராஜாசாஹேப், சகோதரர்களே, இப்பொழுது நடந்த தேர்தலில் கொஞ்சம் வெற்றி கிடைத்திருக்கிறது. இனி நடக்கும் தேர்தல்களிலும் வெற்றி கிடைக்குமென்று நம்புகிறேன். கார்ப்பொரேஷனில் சுயராஜ்யக் கட்சியினர் கைப்பற்றிய 19 இடங்களில் 3 இடங்களைத்தான் அவர்களிடமிருந்து கைப்பற்றியிருக்கிறோம். இன்னும் 16 இடங்களைக் கைபற்ற வேண்டியிருக்கிறது. அதுமாத்திரமா? இன்னும் சட்டசபை இருக்கிறது. இம்மாகாணத்திலுள்ள 24ஜில்லாக்களையும் நாம் கைப்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். இப்போது கிடைத்துள்ள கொஞ்ச வெற்றிக்காக நாம் மிகவும் திருப்தியும் சந்தோஷமும் அடைந்துவிடக் கூடாது. இத்தகைய அபரிமித சந்தோஷத்தால் தான் நாம் ஏமாந்து போகிறோம். ஆனால் தான் கடந்த பொதுத் தேர்தலிலும் நாம் அபஜெயமடைந்தோம். ராயப்பேட்டை டிவிஷன் கொஞ்சம் மும்முரமாக வேலை செய்திருந்தால் திருவாசுதேவ் வெற்றி பெற்றிருப்பார். பார்ப்பன ஓட்டர்களெல்லாம் திரு. சாமிநாத ஐயருக்கேதான் ஓட்டுக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் திரு. ஐயருக்கு யாரும் ஓட்டுக்கொடுக்கவே இல்லையென்பதையும் திரு. வாசுதேவ் வெற்றி பெற்று விடுவார் என்றும் தெரிந்ததும் பார்ப்பன ஓட்டர்களெல்லாம் திரு லட்சுமணன் செட்டியாருக்கே ஓட்டுகொடுத்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியினர் கார்ப்பொரேஷனுக்குள் நுழைவதற்கு முன்னால் பார்ப்பனக் குழந்தைகளுக்கு மட்டுந்தான் பாலவழங்கப்பட்டு வந்திருக்கிறதென்பதைச் சென்னை ஓட்டர்கள் மறந்துவிடக் கூடாது. ஜஸ்டிஸ் கட்சியின் மூலம்தான் எல்லா சமூகங்களும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அடையப் போகிறதென்பதே என்னுடைய அபிப்பிராயம். காங்கிரசில் கலப்பதுமுடியாதென்று சொன்னேன் திரு. செல்வபதி செட்டியார் எப்பொழுதும் உண்மையான பார்ப்பனரல்லாதாராகவே நடந்து கொண்டு வந்திருக்கிறார். அவர் வெற்றியை நான் பாராட்டுகிறேன். ஜஸ்டிஸ் கட்சியும் தொழிற் கட்சியும் ஒன்று சேர்ந்தால் எந்த தேர்தலிலும் வெற்றி கிடைப்பது நிச்சயம். இனி புரசைபாக்கம் ஓட்டர்கள்செய்து முடிக்கவேண்டிய காரியமுக்கியமானது புரசை வாக்கத்திலுள்ள எல்லா ஓட்டர்களும் திரு. கோதண்டராம முதலியாருக்கே ஓட்டு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். நம் கட்சியின் பெருத்த விரோதிகளி லொருவரான டாக்டர் காமத்திற்கு ஓட்டர்கள் நல்ல பாடத்தைக் கற்பிப்பார்களென்று நம்புகிறேன். (கைதட்டல்)

திரு. ஜே எஸ். கண்ணப்பர்.

இதன் பின் பேசிய திரு. ஜே. எஸ் கண்ணப்பர் வெற்றிபெற்ற மூவர்களையும் பாராட்டிப் பேசியவுடன் வெற்றிபெற்றவர்கள் வரப்போகும் தேர்தலில் நம் கட்சி அபேட்சகர்களுக்காக வேலை செய்ய வேண்டுமென்று பேசி முடித்தார்.

திரு நடேச முதலியார்.

தொழிலாளர் தலைவர்களுள் ஒருவரான திரு. நடேச முதலியார் கூட்டத்தில் விஜயமாயிருக்கும் கார்பொரேஷன் கவுன்சிலர்களெல்லாம் திரு செல்வபதி செட்டியாருக்குக் கார்ப்பொரேஷனில் உதவி செய்யவேண்டுமென்று பேசியதுடன் ஸ்ரீமானுடைய சூழ்ச்சிகளைப்பற்றி விஸ்தாரமாகப் பேசி முடித்தார்.

திரு ஏ ராமசாமி முதலியார்.

அதன் பின் பேசிய திரு. ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் பேசியதாவது:— தலைவர்களே, கடந்த கார்ப்பரேஷன் தேர்தலில் திரு. ஜி. செல்வபதி செட்டியார் அடைந்த வெற்றிக்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். சுயராஜ்யக்கட்சியிலுள்ள வீண் வம்பர்களில் ஒருவரான திரு. பக்தவத்சலு நாயுடு முறியடிக்கப்பட்டது சந்தோஷிக்கத்தக்க விஷயம். திரு. பக்தவத்சலு நாயுடு கமிஷனரைத்தாக்குவதே தன் கடமை என்று எண்ணியிருந்தார் (சிரிப்பு) மூன்று மாதங்களுக்கு முன்னால் திரு. சிவராவ் என்னிடம் வந்து இத்தேர்தலில் தொழிற்கட்சியின் சார்பாக அபேட்சகர்களை நிறுத்தப்போவதாகவும் என்னுடைய அபிப்பிராயமென்ன வென்பதையும் கேட்டார். தொழிற்கட்சி அபேட்சகர்களுக்கு

எல்லாம் அக்கிரகாரம்?

பார்ப்பனமயம்.

வகுப்புவாதம் கூடாதென்று இம்மாகாண கவர்னர் கோஷன் பிரபு கூறுகின்றார்; எனவே கோஷன் பிரபு இப்பொழுது பிராமணர்களின் தெய்வமாய் இருக்கின்றார். வகுப்பு வாதம் கூடாதென்று சொல்லும் கோஷன் பிரபுவைச் சென்னை அரசாங்கத்தின் கர்ப்பகிருகமாகிய செக்ரிடேரியட்டைக் கண்திறந்து பார்க்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம். அவர் நல்ல கண்களோடு திறந்து பார்ப்பாராயின் அப்பொழுது வகுப்புவாதம் வேண்டுமா இல்லையா வென்பதைத் தெரிந்து கொள்வார். சென்னை செக்ரட்ரியட்டில் செஜட்டட் இந்திய உத்தியோகஸ்தர் 14-ல் திரு. வி பொன்னையா, திரு. டி பி. இராமசந்திர முதலியார் என்ற இருவரைத் தவிர மற்ற பன்னிருவரும் சாஸ்திரிகளும், சாரிகளும் ஐயர்களுமாய பிராமணர்களே! சீப் செக்கிரட்டேரியட்டில் ராவ் பகதூர் ஹனுமந்த ராவ், ஸ்தல ஸ்தாபன இலாக்காவில் திரு. என். இராமய்யா சாஸ்திரி, சட்ட இலாக்காவில் திவான் பகதூர் டி. இராகவய்யா, ராவ் சாகிப் சி. வி. கிருஷ்ணசாமி ஐயர், ராவ் பகதூர் சி. இராமானுஜாச்சாரியார், அபிவிருத்தி இலாக்காவில் திரு. பி. பாண்டுரங்கராவ், திரு ஆர். இராமசாமி ஐயங்கார், பொதுமராமத்து இலாக்காவில் ராவ்சாகிப் பி கெ. சுப்பய்யர், திரு. நாராயண ராவ், வரவுசெலவு இலாக்காவில் ராவ் பகதூர் வி. கோபால கிருஷ்ணய்யர், சட்டசபை இலாக்காவில் ராவ் பகதூர் ஆர். வி. கிருஷ்ணய்யர், திரு. சி. சடகோபாச்சாரியார் ஆக இப்பன்னிருவர்களெல்லாம் பார்ப்பனர்களே. சென்னை அரசாங்கத்தை ஆட்டுவிக்கும் மூலஸ்தானம் செக்ரிட்டேரியட் என்று சொல்லப்படும். / இதில் 12 மக்கள் பிராமணர்களும், இருவர்மட்டும் பிராமணரல்லாதாரும் இருந்தால் ஏன் சென்னை அரசாங்கத்தையே அக்கிரகாரம் என்று சொல்லக்கூடாது? இக்கொடுமையை ஒழிக்க முற்படாது, கோஷன் பிரபு வகுப்புவாதம் கூடாது என்று சொல்வதால் பயன்யாது என்று கேட்கின்றோம்.

இனி கோஷன் பிரபு வகுப்புவாதம் கூடாதென்றகற்றத்தான் சட்டசபைத் தீர்மானங்களெல்லாம் காற்றில் பறக்கவிடப்படுகின்றன போலும். உத்தியோகஸ்தர்களுடைய பட்டியை வெளியிடுங்கால் அரசாங்கத்தார் அந்த அந்த உத்தியோகஸ்தர்களின் வகுப்பை, அஃதாவது ஓர் உத்தியோகஸ்தர் பிராமணரா? பிராமணரல்லாதாரா, மகமதியரா, கிருஸ்தவரா என்பதைக் குறிப்பிட வேண்டுமென்று சட்டசபை தீர்மானமொன்றை நிறைவேற்றியது. அத்தீர்மானப்படி அரசாங்கத்தார் சென்ற சில ஆண்டுகளாக உத்தியோகஸ்தர்களின் வகுப்பை அவர்களின் பெயருக்கு எதிரே குறித்துக் கொண்டே வருகின்றார்கள். ஆனால் இவ்வாண்டிலோ ஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளின் வகுப்புத்தான் குறிக்கப்பட்டிருக்கின்றதன்றி, சப் ஜட்ஜ், ஜில்லா முன்சீப் இவர்களின் வகுப்பு குறிக்கப்படாதிருக்கின்றது. ஹைகோர்ட் ஜட்ஜுகளில் கனம் குமாரசாமி சாஸ்திரியார், கனம் வி. வி. சீனிவாசய்யங்கார் பிராமணர்களென்றும், கனம் வெங்கடசுப்பாராவ், கனம் மாதவன் நாயர் பிராமணரல்லாதாரென்றும் யாவருக்கும் தெரியும். இதைத்தெரிந்துகொள்ள மக்கள் விரும்பவில்லை ஆனால் சப் ஜட்ஜுகளில் பிராமணர்கள் எவ்வளவு, பிராமணரல்லாதார் எவ்வளவு, முன்சீப்களில் பிராமணர்கள் எவ்வளவு பிராமணரல்லாதார் எவ்வளவு என்ற கணக்கை அறியவே மக்கள் ஆவலாய் இருக்கிறார்கள். இக்கணக்கு தெரிந்தால் அக்கிரகாரமாய் இருக்கின்றதென்ற சாயம் வெளுத்துப் போய்விடும் என்ற அச்சம் அரசாங்கத்தாருக்கு இருக்கின்றது. அதனால் மூடிவைத்து விட்டார்கள் போலும். வகுப்பு வாதம் கூடாதென்று கவர்னர் பேசுவதும், பிராமணர்கள் தாளம் அடிப்பதும் உத்தியோகங்களை யெல்லாம் அக்கிரகாரமாக்குவதற்கென்பது தெள்ளத் தெளிய தெரிந்துவிட்டது! இப்படியிருந்தால் வகுப்புவாதம் எப்படி ஒழியும்?

(திராவிடன்.)

கீழ்வாணி தபாலாபீஸுக்கு மாமாங்கத்துக்கொருமுறை ஆபத்து.

இந்தப்பிராந்தியத்தில் பத்து மைல் சுற்றளவுக்கு தபாலாபீஸ் இல்லாமலிருந்ததினால் முதல் முதலாக அத்தாணியில் ஒரு தபாலாபீஸை ஏற்படுத்தி பொது ஜனங்களுக்கு நேரிட்டிருந்த கஷ்டங்களை நிவர்த்தி செய்தார்கள்.

சொற்ப சம்பளமுள்ள பிராஞ்சு போஸ்டு மாஸ்டர் வீட்டு வாடகை கொடுக்க சாத்தியப்படாத நிமித்தமும் போஸ்டாபீஸ் வைத்திருக்க இனமாக வீடு கிடைக்காததினாலும் ஆபீசை எடுத்து விடுவதாக முதல் மாமாங்கத்தில் ஏற்பட்டுவிட்டது அந்தச் சமயத்தில் கீழ்வாணியிலுள்ள பிரபலஸ்தர்கள் வாடகை இல்லாமல் இடவசதியும் வேலைக்கு தகுந்த யோக்கியதையுள்ள ஆள்களும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டதின் பேரில் அத்தாணியிலிருந்த ஆபீசை கீழ்வாணிக்கு மாற்றினார்கள்.

இரண்டாவதுமாமாங்கத்தில் கீழ்வாணிப் போஸ்டாபீசைகூகலூருக்குமாற்றுவதென்றும் இவ்வாறு செய்தால் டிபார்ட்டுமெண்டுக்கு லாபம் ஏற்படுகிறதென்றும் மேலதிகாரிகளுக்கு பிரபோசல் அனுப்பி உத்திரவு பெற்று விட்டார்கள். ஜனங்களுக்கு நேரிட்ட கஷ்டங்களை மகஜர் மூலியமாக தெரியப்படுத்திக்கொண்டதின் பேரில் போஸ்டாபீஸ்சூப்ரண்டு கீழ்வாணிக்கு விஜயம் செய்து கீழ்வாணியில் போஸ்டாபீஸ் அவசியம் இருக்க வேண்டியதுதானென்று உத்திரவு செய்து இரண்டாவது மாமாங்க ஆபத்திலிருந்தும் பிழைத்துக்கொண்டது.

மூன்றாவது மாமாங்கமாகிய இப்பொழுது கீழ்வாணி ஆபீஸுக்கு போதுமான வரும்படி கிடைக்கவில்லை என்றும் கீழ்வாணி ஆபீசை எடுத்துவிட உத்திரவு பிறப்பித்துள்ளார்கள். இக்காலத்தில் 36 வருஷங்களாக போதுமான வரும்படி கிடைத்திருந்தும்ஆபீசை எடுத்துவிடுவதாக, ஜனங்களின் சௌகரியத்தை சற்றும் கவனியாமல் உத்திரவு பிறப்பித்தது அநீதியாயிருக்கிறது. பத்து மைல் சுற்றளவிலுள்ள கிராமங்களுக்குத் தபால் வகையரா கிடைக்காமல் தபிக்கவேண்டி நேரிடும். ஆகவே இந்த போஸ்டாபீஸை எடுக்காமலிருக்க உத்திரவு பிறப்பிக்க காருண்யமுள்ள கவர்ன்மெண்டார் சிறத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றாவது மாமாங்க ஆபத்திலிருந்தும் தப்புவிக்க சர்வவல்லமையுள்ள கடவுள் அநுக்கிரகம் புரிவாராக என்று மேவாணி திரு.மே. மா. மாரியப்பமுதலி எழுதுகிறார்.

ட்டியாக ஜஸ்டிஸ் கட்சியானது தன் அபேட்சகர்களை நிறுத்தவே கிறுத்தாது என்று கட்சியின் சார்பாக வாக்களித்தேன். அதன்படியே நம் கட்சி அபேட்சகரை பெரம்பூர் டிவிஷனுக்கு நிறுத்தவே இல்லை. திரு. செல்வபதி செட்டியாரின் வெற்றியானது சென்னைத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு முக்கிய சம்பவமாகும். தொழிலாளரின் நண்பர்கள் யாரென்பதையும் தொழிலாளரின் பகைவர்கள் யாரென்பதையும் தொழிலாளர்கள் இப்பொழுதாவது தெரிந்து கொண்டிருப்பார்கள். தேர்தலில் திரு. செல்வபதி செட்டியாருக்கு ஆதரவளித்தது போன்றே கார்ப்பொரேஷனிலும் அவருக்கு எங்கள் உதவியையளிக்க நாங்கள் தயாராயிருக்கிறோம். (கைதட்டல்) அடுத்தபடியாக திரு. கிருஷ்ணதாஸ் லாலா அவர்களுக்கும் என் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். திரு. லாலா அவர்கள் எங்கள் உதவியைப் பகிரங்கமாகப் பெறுவதற்கு விரும்பவில்லையானாலும் நாங்கள் அவருக்குப் பெருத்த உதவி செய்திருக்கிறோமென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கடுத்தபடி திரு. சக்கரை செட்டியாருக்கும் என்னுடைய வாழ்த்து கூறுகிறேன். பெத்துநாயக்கன் பேட்டை ஓட்டர்கள் ஜாதி மதங்களைக் கவனியாது அரசியல் கொள்கைகளையே ஆதரித்துத் திரு. சக்கரை செட்டியாரை ஆதரித்ததற்காக நான் அவ்வோட்டர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன். கமிஷனர் பார்ப்பனரல்லாதாராயிருப்பதனாலேயே டாக்டர் காமத் அவரைத் தாக்கிவருகிறாரென்பதை ஓட்டர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். காலரா நோயைக் குறித்து டாக்டர் காமத்தும் அவரைப்போன்றவர்களும் கமிஷனரையும் சுகாதார ஆபீசரையும் தாக்கிவருகின்றார்கள். திரு. கோவிந்த பிள்ளைக்குப் பதிலாக திரு. ராகவேந்திர ராவ் இருக்கும் பட்சத்தில் இப்பொழுது குலைத்துக் கொண்டிருப்பவர்கள் மௌனம் சாதிப்பார்களென்பதில் சந்தேகமேயில்லை. கர்னல் ரஸ்ஸல் அவர்கள்கூட திரு. கோவிந்த பிள்ளையின் ஊக்கத்தைப் பாராட்டியிருக்கிறார். அப்படியிருந்தும் டாக்டர் காமத்தைப்போன்ற பார்ப்பன கவுன்சிலர்கள் திரு. கோவிந்த பிள்ளையைத் தாக்குவதே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையோர்க்கெல்லாம் ஓட்டர்கள் நல்லபாடத்தைக் கற்பிப்பார்களென்று நம்புகிறேன். (கைதட்டல்)

இதற்குப்பிறகு வெற்றி பெற்ற திரு. வி. சக்கரை செட்டியாரும் திரு. கிருஷ்ணதாஸ் லாலா அவர்களும் திரு. ஜி. செல்வபதி செட்டியாரும் தங்களுக்குக்கூறப்பட்ட வாழ்த்துக்களுக்குத் தக்கபடி பதில் கூறிவந்தனமளித்தார்கள். தலைவர் முடிவுரையாகச் சில வார்த்தைகள் பேசினார்.

(திராவிடன்.)

அறிவை அடக்க புதிய சட்டம்.

மதஸ்தாபகர்களைக் குற்றம் சொல்வதைப்பற்றி தண்டிக்க என்னும் போல ஒரு புதிய சட்டம் வேண்டுமென்றும் இப்போது எங்கும் ஒரே கூச்சலாயிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை நமது நாட்டுப் பார்ப்பனர்கள் தங்களுக்கு அனுகூலமாய் உபயோகப்படுத்திக்கொண்டு தங்களுடைய அக்கிரமங்களை நிலைக்க வைத்துக்கொள்ள எண்ணி அவர்களும் கூடவே கோவிந்தா போடுகிறார்கள்.

இம்மாதிரி ஒரு சட்டம் ஏற்படுத்துவதானது மனித உரிமையை அடக்குவதாகுமேயல்லாமல், மனிததர்மத்திற்கு நீதி செய்ததாகாது என்பதாக நாம் வலியுறுத்துவோம். மதம் என்று சொல்வது ஒரு மனிதனுடைய கொள்கை அல்லது அபிப்பிராயமாகுமேயல்லாமல், அது உலகத்திலுள்ள மனிதகோடிகள் அத்தனை பேரும் கட்டுப்பட்டு நடந்துதான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடியதல்ல. அப்படி எல்லோரையும் கட்டாயப் படுத்தப்பட்ட விஷயம் இந்த உலகத்தில் ஒன்றுகூட இல்லையென்பதே நமது அபிப்பிராயம். உலக மனிதர்களில் 100-க்கு 99¾ பேர்களால் ஒப்புக்கொள்ளுவதாகச் சொல்லப்படும் கடவுளையும் அவரது தத்துவங்கள் என்பதையும் மறுப்பதற்கே எல்லா மனிதனுக்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

கடவுள் செய்ததாகச் சொல்லுவதையும், சொன்னதாகச் சொல்லுவதையும் பற்றிய தர்க்கங்களும் மறுப்புகளும் அறிவு உலகத்தில் தினமும் தாண்டவமாடிக்கொண்டிருக்க உலகம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை எதிர்பார்த்து அடையாமல் போனவர்களில் பலர் கடவுளையுங்கூட தூஷிப்பதையும் உலகம் பார்த்துக்கொண்டும் அனுமதித்துக் கொண்டுந்தான் வருகிறது. கடவுளைப்பற்றியே இவ்வளவு அனுமதிக்கப்பட்டவர் கடவுள் பக்தர்கள் என்று சொல்லுபவர்களைப்பற்றி, கடவுளை அடைய வழிகாட்டிகள் என்று சொல்லுபவர்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? எனவே இவ்விஷயங்கள் ஒருவனுடைய அபிப்பிராயமாகுமேயல்லாமல் அதுவே சத்தியமாய் விடாது. உலகத்தில் ஏதாவது சீர்திருத்தம் என்பது ஏற்படவேண்டுமானால் ஒருவர் அபிப்பிராயத்தை ஒருவர் கண்டிப்பதும் மறுப்பதும், ஒருவர் கொள்கையை ஒருவர் கண்டிப்பதும் மறுப்பதும் அனுமதிக்கப் பட்டுத்தான் ஆகவேண்டும். அதற்குச் சட்டம் போட்டு தடுத்துவிட்டால் அது மனிதனின் அறிவு வளர்ச்சியை தடுத்ததாகுமேயொழிய மற்றபடி அது எந்த விதமான நன்மையையும் செய்ததாக ஆகாது. அன்றியும் இம்மாதிரியாக ஒரு சட்டமியற்றுவது அநாகரீகமும் காட்டுமிராண்டித்தனமுமேயாகும். இப்பேர்ப்பட்ட விஷயங்களில்தான் மக்களுக்கு விசாரணை செய்ய தாராளமாக இடம் கொடுக்கப்படவேண்டும். அதற்கு இடையூறாய் உள்ளவைகளைப் பலமாய் தகர்த்தெறியவேண்டும். ஒவ்வொரு காலத்திலுள்ள மக்கள் அறிவுநிலைக்கேற்றவாறு ஒவ்வொரு கொள்கைகள் பரப்பப்படுவதும், அது நிலைபெறுவதும், அதற்கு கோடிக்கணக்கான மக்கள் பின்பற்ற ஏற்படுவதும், சகஜமானதேயல்லாமல் அதில் ஒன்றும் அதிசயமில்லை. அதுபோலவே தற்காலம் உள்ள மக்கள் அறிவு நிலைக்குத்தக்கபடி மாறிக்கொண்டே வருவதும் இயற்கையேயொழிய அதிலும் ஒன்றும் அதிசயமில்லை. எனவே மக்கள் வெறும் அரசியல் சமூக இயலில் மாத்திரம் முற்போக்கடைய வேண்டியது பாக்கியாயில்லை. அறிவிலும் ஆத்மார்த்த விஷயத்திலும் மனிதனுக்குள் இன்னமும் என்ன என்ன சக்தி இருக்கிறது என்பதைக்கண்டுபிடிப்பதிலும் முற்போக்கடையவேண்டிய விஷயங்கள் எவ்வளவோ பாக்கியிருக்கிறது. அவைகளை கவனிக்கும் போது இந்த அரசியலும் சமூகஇயலும் வெகு சிறியதேயாகும். ஆனால் அப்பேர்ப்பட்ட முயற்சிகளுக்கு சமூக இயல் முதலியவைகள் அடிகோலிகள் என்பதை மாத்திரம் ஒப்புக்கொள்ளலாம். ஆதலால் இம்மாதிரி அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாகிய பிறப்புரிமையான சுதந்திர உணர்ச்சிகள் சட்டத்தின் மூலமாய் அழிக்கப்பட்டால் உலகம் காட்டுமிராண்டித்தனத்திற்குஆளாகநேரிடும் என்பதை அறிவாளிகளுக்குஎச்சரிக்கை செய்கிறோம்.

ஈரோட்டில் ஸ்ரீ வரதராஜுலு நாயுடு.

லக்ஷ்மி குடி நூல் கதர்சாலை.

ஈரோட்டிற்கு "லக்ஷ்மி குடி நூல் கதர்சாலை" திறப்பு விழாவுக்காக ஸ்ரீமான் ஈ. பி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் வேண்டுகோளின் பேரில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்கள், ஸ்ரீமான்கள் ஜி. ராமச்சந்திர நாயுடு, பவானி சிங்கு முதலியவர்களுடன் 17—8—27-தேதி காலை 9 மணிக்கு மோட்டாரில் வந்து சேர்ந்தார். ஈரோடு மண்டி வீதியில் ஏற்படுத்தப்பட்ட கதர் கடையை சரியாய் காலை 10-மணிக்கு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் தலைமையில் திறந்து வைத்தார். அநேக ஜனங்களும் வியாபாரிகளும் வந்திருந்தார்கள். பிறகு ஸ்ரீமான் ஈ. பி. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் வீட்டில் ஒரு விருந்து நடந்தது.

தேக் கச்சேரி.

ஈரோடு கதர் பாதுகாப்புக் கழகத்தாரும் தமிழர் சமாஜத்தாருமாகச் சேர்ந்து ஈரோடு பஞ்சாயத்துகோர்ட் கட்டிடத்தில் ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவுக்கு ஒரு தேக் கச்சேரி ஸ்ரீமான் சுப்பிரமணியத்தால் நடப்பித்து உபசாரவார்த்தைகள் சொல்லி கௌரவம் செய்தார்கள்.

ஊர்வலம்.

சரியாய் 5-30 மணிக்கு ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு அவர்களை ஊர்வலமாக ஈரோடு பட்டண வீதிகள் வழியாய் மேளவாத்தியங்களுடன் அழைத்து அலிசவுக்கு மீட்டிங்கு ஸ்தலத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஊர்வலத்தில் ஏராளமான ஜனங்கள் கலந்து கொண்டு வந்தார்கள்.

பொதுக்கூட்டம்.

மாலை 6-30 மணிக்கு அலிசவுக்கில் ஒரு பிரமாண்டமான பொதுக்கூட்டம் கூடிற்று. கூட்டத்திற்கு 2000 பேருக்கு மேலாகவே விஜயம் செய்தார்கள். ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தில் ஸ்ரீமான் நாயுடு அவர்கள் சுயராஜ்யத்தின் அவசியத்தைப்பற்றியும், வர்ணாசிரமத்தின் கொடுமையைப்பற்றியும், சுயராஜ்யத்திற்கு எதிரிடையாய் பார்ப்பனர்கள் செய்யும் சூழ்ச்சியைப்பற்றியும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் இந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றியும் பேசினார்.

தலைமைவகித்த ஸ்ரீமான்நாயக்கர், ஸ்ரீமான் நாயுடுகாருக்கும் தனக்கும் விசேஷ அபிப்பிராய பேதமில்லையென்றும், ஸ்ரீமான் நாயுடுகார் சுயராஜ்யம் அடைந்து விட்டால் சட்டத்தின் மூலம் நமது சுயமரியாதையை நிலை நிறுத்திக்கொள்ளலாம் என்கிறார் என்றும், தாம் சுயமரியாதை ஏற்படாத மக்களுக்கு எந்தவிதத்திலும் சுயராஜ்யம் சித்திக்காதென்றும், சித்தித்தாலும் வைத்து வாழ முடியாது என்று சொல்வதாகவும், இந்த இரண்டு வித்தியாசங்களைத் தவிர மற்றபடி அதிகமாக வேறு வித்தியாசமில்லை என்றும் பேசினார். கூட்டம் 8¾ மணிக்கு முடிந்தது. பிறகு ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் வீட்டில் இரவு விருந்து நடந்த பிறகு,

இந்தி வகுப்பு.

பஞ்சாயத்துக்கோர்ட்டு கட்டிடத்தில் ஸ்ரீமான் முத்துக்கருப்பஞ் செட்டியாரவர்கள் கட்டிடத்தில் ஸ்ரீமான் கிருத்திவாசு அவர்கள் வேண்டுகோளின் பேரில் ஒரு இந்தி வகுப்பு ஆரம்ப திருவிழா நடந்தது.

மறுநாள் காலை 6மணிக்குஸ்ரீமான்கள் வரதராஜுலு நாயுடு, ராமச்சந்திர நாயுடு, கோவை லக்ஷ்மணன், பவானி சிங்கு ஆகியவர்கள் மோட்டாரில் சேலத்திற்கு பிரயாணமாகி விட்டார்கள். நாயுடுகார் வரவால் இவ்வூரில் பெருத்த கிளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கதரும் சுயமரியாதை உணர்ச்சியும் தாண்டவமாடுகின்றது.

ஒரு நிரூபர்.

சுயமரியாதைப் பிரசார சுற்றுப்பிரயாணம்.

ஸ்ரீமான்கள் பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி நாயுடு, சி. நடராஜ முதலியார், எஸ். வி. லிங்கம் ஆகிய கனவான்களின் தஞ்சை ஜில்லா சுயமரியாதைப் பிரசார சுற்றுப்பிரயாணம்.

31—7—27	பொன்மலை.
1, 2—8—27	திருச்சி.
3, 4—8—27	நாகை.
5—8—27	மாயவரம்.
6—8—27	பொருள்வைத்த
8—8—27	புதையாறு. [சேரி.
9, 10—8—27	மாயவரம்.
11—8—27	தஞ்சை,
12—8—27	திருக்கண்ணக்குடி.
13, 14—8—27	திருவாரூர்.
15—8—27	மன்னார்குடி.
17—8—27	ஈரோடு.

அடுத்தவாரம் முழுவதும் திருவண்ணாமலை சிதம்பரம் முதலிய இடங்களில் "திராவிடன்" பத்திரிகைவிஷயமாய் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். அன்பர்கள் அவர்களுக்குத்தக்க ஆதரவளிக்கும்படி வேண்டுகிறோம்.



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஹூ ஆவணி 5உ

திருப்பூர் மகாநாடு,

திருப்பூரில் மகாநாடு கூடிக்கலைந்தாகி விட்டது. தீர்மானங்கள் கவர்னருக்கு அனுப்பியாய் விட்டது. மற்ற விஷயங்கள் எப்படிப் போனாலும் இதனால் கவர்னர் தயவு இரண்டொரு ஆசாமிகளுக்கு கிடைத்தாய் விட்டது. அதன் மூலம் சிலருக்கு உத்தியோகமும் சிலருக்குப் பட்டமும் வந்து விடப்போகிறது இதைப்பொறுத்தவரையில் உறுதி தான்.

மற்றபடி உபசாரணைத் தலைவர்மகாநாட்டுத் தலைவர் பிரசங்கங்கள், ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் ஒ. கந்தசாமி செட்டியார் முதலிய கனவான்களின் பிரசங்கங்களைப் போல் தான் என்றே சொல்லவேண்டும். பெரும்பாலும் சர்க்காரையும் மந்திரிகளையும் புகழ்ந்துபார்ப்பனால்லாதார் கட்சியை ஆசை தீர எழுதிக் கொடுத்தபடி வைதது தான் முக்கிய அம்சமாகும்.

மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் சர். முத்தய்ய செட்டியாரைப் பற்றி நாம் விஷேஷமாக சொல்ல வேண்டியதில்லை. அவரது கொள்கையைப்பற்றியும் சொல்லவேண்டியதில்லை. சுருக்கமாக சொல்வதானால், பச்சயப்பமுதலியார்தர்மஸ்தாபன தர்மகர்த்தாக்களில் இவர் ஒருவராயிருப்பதில் அப்பள்ளிக்கூடத்திற்குஒடுக்கப்பட்ட வகுப்புப்பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று கட்சிகட்டிக்கொண்டிருப்பவர். ஆனால்ஒடுக்கப்பட்டவர்கள் உபாத்தியாயர்களாக இருப்பதில்ஆக்ஷேபணை இல்லை என்பவர். ஆகவே இவரதுகொள்கையும் பகுத்தறிவும் பொது ஜனங்களே தீர்மானித்துக் கொளளலாம். இமமகாநாட்டுக்குஸ்திதாரராய் இருந்த மற்றொரு செட்டியாரான ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் அவர்களோ சொல்லவேண்டியதில்லை.

அவர் அரசியல் பிறப்பைப்பற்றி சிறு கவுதி எழுதலாம்.

1915ல் பம்பாய் லிபரல் லீக்கில் ஒரு மெம்பராய்ச் சேர்ந்து சென்னை மகாணத்திற்கு லிபரல்லீக் நிர்மாணியாயிருந்தவர்.

பிறகு அடுத்த வருஷம ஜஸ்டிஸ் கட்சியில் முக்கியஸ்தரில் ஒருவராய் இருந்தவர். அதைத்தாப்போல் தமக்கு மந்திரி பதவி கிடைக்காததால் யூனைட்டெட் நேஷனலிஸ்ட்டு கட்சி உண்டாக்கி தலைவரானவர் அமைநாடு மந்திரிகள் பேரில் நம்பிக்கை இல்லாத தீர்மானம் கொண்டு வந்தவர். அடுத்தாப்போல் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்தவர்.

அதற்கடுத்தாப்போல் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களுடன் "சட்ட சபையில் ஒருபிரயோஜனமும் இல்லை நம்பிக்கையுமில்லை வெளியில் போய் சர்க்காருக்கு புத்திகற்பிக்கிறேன்". என்று சொல்லி வெளியில் வந்தவர்.

வெளியில் வந்து மறுபடியும் சுயராஜ்யக் கட்சி சார்பாய் சட்டசபைக்கு போகச்செரிந்தெடுத்து சென்னை பார்ப்பனர்கள் நிபந்தனைப்படி 500 ரூபாயும் காணிக்கை கொடுத்தவர்.

மறுபடியும் 15 நாளில் "சுயராஜ்யக்கட்சி தலைவர் உத்தியோகம் கிடைக்கும் படி செய்கிறேன். என்று சொன்னதை நம்பி நான் காங்கிரசில் சேர்ந்தேன். சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்தேன். சட்ட சபை விட்டு வெளியிலும் வந்தேன். 500 ரூபாய்காணிக்கையும் கொடுத்தேன்இப்போது பார்த்தால அதில் உத்தியோகம்கிடைக்காது போல் தோன்றுகிறதுஆதலால் நான் சுயராஜ்யக்கட்சி முதலியவைகளில் ராஜினமா கொடுக்கிறேன்" என்று ராஜினமா கொடுத்தவர்.

மறுபடி தானக சட்டசபைக்கு நின்று எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் பட்டக்காரர் அனேகபார்ப்பனர்கள் ராமசாமி நாயக்கர் முதலியோர் பாடுபட்டும் தோற்றுப் போனவர்.

"கதரில் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை கதரை ஒரு காலும ஆதரிக்க முடியாது" என்று கண்டிப்பாய் சொல்லி விட்டவர்.

தீண்டாமை விலக்கைப்பற்றி சொல்லவே வேண்டியதில்லை. பார்ப்பனரத்தான் வீட்டில் சமையல்காரராய் வைத்திருப்பவர்.

மது விலக்கிலோ ஸ்ரீமான் வெங்கிட்டராமணய்யங்காருக்கு இளைத்தவரல்ல.

இப்போதோ மந்திரிகட்சி 3 மந்திரிகளையும் நடத்திக் கொடுக்கவேண்டியபொறுப்பு தன் தலையில் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருப்பவர்.

இவ்வளவும் அல்லமால், திருப்பூர் மகாநாட்டில் கதர் மது விலக்கு முதலிய தீர்மானங்களையும் எழுதிக்கொடுத்து நிறைவேற்றி இருக்கிறவர். இம்மாதிரியாக இருப்பதில் அரசாங்கத்தாராவது பொது ஜனங்களாவது எப்படி மதிக்கக்கூடும். இவர்கள் போன்றார்கள் தீர்மானத்திற்கு தேசத்தில் எவ்வித யோக்கியதை இருக்கும். இவைகளையோசியாமல், பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்பதாக மகாணத்திற்கே பொதுவாய் கூட்டப்பட்டது என்பதையும், அது ஒரு சட்டம்,விதி,கட்டு திட்டத்திற்கு அடங்கிநடந்து வருகிறது என்பதையும், அதற்கு நாட்டில் உள்ளசெல்வாக்கையும், அதனால் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்குஎவ்வளவுமரியாதை உண்டாயிருக்கிறது என்பதையும், ஒரு சிறிதும் கவனியாது எதிர் மகாநாடு என்பதாக கூட்டுவதென்றால் அம்மாதிரியான குணத்திற்கு என்னபெயரிடுகிறது.

கோட்டை மாரியம்மன் கோவிலில் ஒரு எருமைக்கிடா வெட்டுவதானால எவ்வளவோபேர் வேடிக்கைபார்க்க வந்துவிடுகிறார்கள், அதுபோல் கூட்டம் இருந்ததாலேயே பிரதிநிதித்துவ மகாநாடு ஆகிவிடுமா? அப்படியானாலும் எத்தனை பிரதிநிதிகள் வந்தார்கள்? என்ன கொள்கையை ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்கள்? பிரதிநிதிகளுக்கு என்ன குறிப்பு இருந்தது? என்பவைகளை மற்றவர்கள் கவனிக்க மாட்டார்களா என்கிற எண்ணமின்றி இந்த இருபதாவது நூற்றாண்டில் கொம்பு தம்பட்டம் தட்டி கூட்டம் சேர்த்து, அதற்கு மகாநாடு என்று பெயர் வைத்து, தீர்மானங்கள் தீர்மானிப்பது என்ற வேஷம்போட்டு, அவன் பலஜாதி இவன் இடைவெட்டு, அவன் முட்டாள், இவன் மடையன், என்று மேடையில் பேசி நிறைவேற்றிய தீர்மானத்தை பொதுஜனங்கள் தீர்மானம் என்றால் நம்புவதற்கு ஆள் எங்கே என்றுதான் கேள்க்கிறோம்? இந்த வார்த்தைகளைக் கொண்ட சபையை மக்கள் எப்படிப்பட்ட சபையென்று நினைப்பார்கள் என்கிற ஞானமே இல்லாமல் காரியங்கள் நடைபெற்றுவிட்டதானாலும், இதனால் ஸ்ரீமான் செட்டியாருக்கு உத்தியோகம மற்றவர்களுக்கு "பெப்பெப்பே" அல்லாமல் மற்றபடி யார் என்ன பயன் அடையக்கூடும் என்பது நமக்கு விளங்கவில்லை. பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கும் இதனால் ஒன்றும் முழுகிப் போகவில்லை யானாலும நமது எதிரிகளான சர்க்காரும் பார்ப்பனர்களும் நம்மைப்பார்த்து சிரிக்கவும், அதாவது பார்ப்பனரல்லாதார் கூட்டத்தில் எதற்கு வேண்டுமானாலும் ஆள்கள் கிடைக்கும், என்ன வேண்டுமானாலும் அவர்களைக்கொண்டுசெய்துகொள்ளலாம், அதற்கு சுயமரியாதை இல்லையென்று பேசிக்கொள்ளவும், இம்மாதிரி கூட்டம் கோயமுத்தூரில் இருக்கிறது என்று மற்ற ஜில்லாக்காரர் கேவலமாய் நினைக்கவுமல்லாமல் வேறொன்றும் முழுகிப் போய்விடவில்லை. மற்றபடி இத்தீர்மானத்தினால் மந்திரிகளுக்கு பதவி ஆயுசு வளரப்போவதும் இல்லை. குறையப் போவதுமில்லை. ஜில்லாவுக்கும் ஜில்லாவின் பெரிய சமூகங்களுக்கும் கெட்ட பெயர் தான் மிச்சம்.

திருப்பூர் மகாநாட்டைப் பற்றி முழு விபரங்களும் போட போதிய சாவகசம் இல்லை. ஆனாலும் சவுகரியப்பட்டால் மறு தடவையும் இதைப்பற்றி எழுதுவோம்.

பயப்படுகிறோம்.

மகாத்மா காந்தியின் தமிழ்நாட்டு விஜயம்.

இது ஒரு சங்கராச்சாரி விஜயமாகிவிடும் என்பதாகவே பயப்படுகிறோம்.

மகாத்மா காந்தியவர்கள் உலகம் போற்றும் பெரியார் என்பதிலும், பரிசுத்தமான எண்ணமுடையவர் என்பதிலும், மக்களுக்கு நன்மை செய்வதில் உண்மையான ஆசை உள்ளவர் என்பதிலும், அநேக கஷ்டத்துக்கொண்டு உழைக்கிறார் என்பதிலும், யாருக்கும் எவ்வித அபிப்பிராய பேதமுமிருக்க நியாயமில்லை. ஆனபோதிலும் அதோடுகூடவே மகாத்மா காந்தியவர்கள் நம் நாட்டுப் பார்ப்பனர்கள் கையில் சிக்கி இருப்பவர் என்பதையும், நம் நாட்டு விஷயங்களைப் பார்ப்பனர்கள் மூலம் அறிந்து பார்ப்பனக் கண்ணாடியினால்தான் பார்த்தறியக் கூடிய நிலைமையில் இருக்கிறார் என்பதையும், நாம் மறைப்பதில் பிரயோஜனமில்லை. சாதாரணமாக இந்துமுஸ்லீம் அபிப்பிராயபேதங்கள் விஷயமாக மகாத்மா காந்தியவர்கள் எவ்வளவு பேசினார், எவ்வளவு எழுதினார், எவ்வளவு பட்டினி கிடந்தார், எவ்வளவு வருத்தப்பட்டார் என்பதைப்பற்றி வாசகர்களுக்கு நாம் எடுத்துக்காட்டவேண்டியதே இல்லை. அப்பேர்ப்பட்ட மகாத்மா பிராமணர் பிராமணரல்லாதார் அபிப்பிராய பேதம் என்பதைப்பற்றி இதுவரை என்ன பேசினார், என்ன எழுதினார், என்ன பட்டினி இருந்தார், என்ன வருத்தப்பட்டார் என்று கேள்ப்பதுடன், குருகுல கிளர்ச்சியான கவனிக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வந்தபோதுங்கூட ஜாக்கிரதையாய் இரண்டுபேருக்கும் நல்ல பிள்ளை ஆவதுபோல் தப்பித்துக்கொண்டாரே யொழிய இப்படித்தான் நடக்கவேண்டும் என்று கண்டிப்பாய் சொன்னாரா, எழுதினாரா, என்பதை யோசியுங்கள். குருகுல அக்கிரமத்தைப்பற்றி காங்கிரஸ் மகா சபையில் வெளிப்படையாய் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் எடுத்துச்சொன்ன காலத்தில் மகாத்மா கேட்டுக்கொண்டுதான் இருந்தார். தமிழ் நாட்டில் அதைப்பற்றித் தீர்மானங்களும், அதற்காக ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன் போன்ற பார்ப்பனத் தலைவர்கள் ராஜினாமாக்களும், ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரிபோன்ற வர்ணாசிரமிகளின் வாய்க்கொழுப்புகளும் மகாத்மா காந்திக்கு தெரியாமல் இருந்ததென்று யாரும் நம்பிவிடமுடியாது. இப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு ஏதாவது ஒரு சிறு சமாதானம் எழுதினாரா என்பதை யோசித்துப்பாருங்கள். இவைகள் நாட்டு நலனுக்கு அவ்வளவு முக்கியமானதல்ல என்று சொல்லிவிடமுடியுமா?

ஒத்துழையாதாரான ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் திருப்பதி கோர்ட்டில் போய் வக்கீலாக வழக்காடி கேஸ் ஜயித்ததற்கு வாழ்த்துக் கூறினார். ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார், தமது தோப்பில் கள்ளிறக்க மரம் கொடுத்த ஸ்ரீமான் வெங்கிட்டரமண அய்யங்காருக்கு கிராமம் கிராமமாய் சுற்றி ஓட்டு வாங்கிக் கொடுத்ததை மிக நல்ல காரியமென்று ஆதரித்தார். "சுயராஜ்பக்ஷியார்கள் சட்ட சபையில் கள்ளை நிறுத்துவதாக ஒப்புக்கொண்டது மிகவும் நல்லது. ஆதலால் அவர்களுக்கு ஓட்டுக் கொடுங்கள்" என்கிற மாதிரியாகவும் எழுதினார். இதன்மூலம் சட்டசபையினால் கள்ளை நிறுத்தமுடியும் என்று மகாத்மா நம்புகிறார் என்று ஜனங்கள் நினைக்கும்படியும் நடந்துகொண்டார். ஒரு கடவுள், தனது பக்தனுக்காக—என்னென்ன காரியத்தில்—கடவுள் தன்மைக்கு விரோதமாகக்கூட நடந்ததாக நமது புராணங்களில் சொல்லப்படுகிறதோ அவைகளுக்கு மேலாகவெல்லாம் நமது நாட்டுப்பார்ப்பன பக்தர்களுக்காக மகாத்மா அவர்கள் நடந்துவந்தார். அவ்வளவு தூரம் பிரயத்தனம் எடுத்துக்கொண்ட மகாத்மாவுக்கு என் நமது நாட்டுப்பார்ப்பனர் பார்ப்பனரல்லார் அபிப்பிராய பேதத்தைப்பற்றி ஒரு வார்த்தையாவது பேச எழுதமுடியாமல் போய்விட்டது என்று யோசிக்கும்போது நமக்கு மகாத்மாவைப்பற்றி குழப்பம் ஏற்படுகிறதா இல்லையா? தென்னாட்டிலிருக்கும் இவ்வபிப்பிராயபேதம் மகாத்மாவுக்கு தெரியாது என்று சொல்வதானால் மகாத்மாவைச்சுற்றியிருக்கும் பார்ப்பன பக்தர்கள் அவ்வளவு தூரம் மகாத்மாவை காதுகண்ணில்லாமல் செய்துவிடுகிறார்கள் என்றாவது ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறதா இல்லையா? இந்த நாட்டில் இவ்வளவு அபிப்பிராய பேதங்களையும் கொடுமைகளையும் பற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதற்கு விடாமல் அவரைக்கொண்டு கதரின்பேரால் பார்ப்பன பிரசாரத்திற்கு பணம் சம்பாதிக்க நமது பார்ப்பனர்கள் நமது நாட்டிற்கு மகாத்மாவை கூட்டிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் கதர் பண்டு என்பதாக அதற்குப் பெயர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எப்படி "மதச்சங்கராச்சாரியர்களை" மோக்ஷபலனுக்காக நமது வைதிகப்பார்ப்பனர்கள் கூட்டிக்கொண்டுவருகிறார்களோ அதுபோலவே மகாத்மாவை நமது அரசியல் பார்ப்பனர்கள் அரசியல் சங்கராச்சாரியாக நமது நாட்டுக்கு கூட்டிக்கொண்டு வருகிறார்கள். இங்கு வரும் வேலையைப்பற்றி மகாத்மாவைக்கொண்டே "நான் பணத்திற்காக வருகிறேனே அல்லாமல் வேறு காரியத்திற்காக அல்ல" என்பதாக வெளிப்படையாகவும்சொல்லச்செய்துவிட்டார்கள். சங்கராச்சாரியாருக்குமோட்சத்தின்பேரால் கொடுக்கும் பணம் எப்படி பார்ப்பனர்களுக்கே போய்ச்சேரவும் நம்மை இழிவுப்படுத்தவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதோ அதுபோலவே மகாத்மாவாகிய அரசியல் சங்கராச்சாரியார்களுக்கும் கதர் பேரால்கொடுக்கப்படும் பணம் கண்டிப்பாய் பார்ப்பனர்களுக்கும் நமது இழிவுக்குமே போய்ச்சேர உபயோகிக்கப்படப் போகிறது என்பதே நமது அபிப்பிராயம். என்னவெனில், கதர் இலாக்காவில் நமக்கு சிறிது அனுபோகம் உண்டு. கதர் ஸ்தாபனத்தில் நமக்கும்சிறிது தகவலுண்டு. இப்பொழுது வசூல் செய்யப்படும் பணம் பூராவும் அந்தஸ்தாபனத்தை நடத்துவதற்குத்தானே அல்லாமல் கதர் வியாபாரத்திற்கு அல்ல. அந்தஸ்தாபனம்

"திராவிடன்"

வேண்டுமா? வேண்டாமா?

சகோதரர்களே!

பார்ப்பன ஆட்சியாலும், பார்ப்பன சூழ்ச்சியாலும், பார்ப்பன மதத்தாலும், பார்ப்பனப்பத்திரிகைகளின் பிரசாரத்தாலும், நீங்கள் இழந்து கிடக்கும்சுயமரியாதையையும், சுதந்திரத்தையும், ஒற்றுமையையும் திரும்பவும் அடைய

வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமானால் அதற்கென்றே உங்கள் தொண்டர்களால்; பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் பழிகளுக்கும் ஆளாகி நடத்தப்பட்டு வரும் **'திராவிடனை"** வாங்கிப் **படியுங்கள்.** "திராவிடன்" தான் போலி தேசியத்தையும் சுயராஜ்யப் புரட்டையும் தைரியமாய் வெளியாக்கி சுயமரியாதைக்கென்றே உழைப்பவன். எனவே. "திராவிட"னன்றிக் கண்டிப்பாய் உங்களுக்கு கதிமோட்சமில்லை; இதை நம்புங்கள்.

XXXXXX
XXXXXX

பெரும்பாலும் இப்போது பார்ப்பன அக்கிரகாரமாகவே இருந்து வருகிறது. அதன் நிர்வாகத்தில் இரண்டொரு பார்ப்பனரல்லாதாரும் தலைமைப் பதவியில் இருக்கிறார்கள் என்று பார்ப்பனர்கள் சமாதானம் சொல்லக்கூடுமானாலும், இது எறக்குறைய, ஸ்ரீமான்கள் சுப்பராயன், ஆரோக்கியசாமி முதலியார் ஆகியவர்கள் பார்க்கும் மந்திரி பதவி பார்ப்பனரல்லாதார் பதவி என்று சொல்லுவது போல் தானே ஒழிய வேறு அதிகவித்தியாசமில்லை. சாதாரணமாக திருப்பூர் வஸ்திராலய நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் அதில் கதர் வேலையைவிட வர்ணாஸ்ரம பிரசாரமே தாண்டவமாடுவதை பார்க்கலாம். வாஸ்தவத்தில் மகாத்மாவின் நோக்கத்தை அனுசரித்த அல்லது மக்கள் நோக்கத்தை அனுசரித்த பொது ஸ்தாபனமாக கதர் ஸ்தாபனம் இருக்குமானால் கண்டிப்பாய் அவைகளில் வருணாஸ்ரமிகளுக்கு இடமிருக்கவே நியாயமிருக்காது. கதரும், தீண்டாமை விலக்கும், மது விலக்கும் ஒன்றுக்கொன்று சகோதரக்கொள்கையுடையதே ஒழிய வேறு பட்டதல்ல. கதரில் நம்பிக்கையில்லாதவனுக்கு கதர் ஸ்தாபனத்தில் வேலை கொடுக்கக்கூடாது என்பது எவ்வளவு நியாயமானதோ, குடிகாரனுக்கு கதர்ஸ்டோரில் வேலை கொடுக்கக்கூடாதென்பது எவ்வளவு நியாயமானதோ, அதுபோலவே வர்ணாசிரமம் பிறவியில் உயர்வு தாழ்வு உண்டு என்று நினைத்துக்கொண்டிருப்பவனுக்கு கதர் இலாக்காவில் வேலை கொடுக்கக்கூடாது என்பதே நமது அபிப்பிராயம். குடிகாரனையும் கதரில் நம்பிக்கை இல்லாதவனையும் கதர் இலாக்காவில் வேலைக்கு வைப்பதால் கூட அவ்வளவு மோசம் வந்து விடாது ஆனால் ஒரு வர்ணாசிரமக்காரனை ஒரு இலாக்காவுக்கு நிர்வாகத் தலைவனுய் நேமிப்பதில் யெல்லாவற்றையும்விட அதிகமான கெடுதி இருக்கிறதென்பதே நமது அபிப்பிராயம். ஏனெனில் பிறவியில் தன்னை உயர்ந்தவனென்று நினைத்துக்கொண்டு இருக்கிறவன், பிறவியில் வித்தியாசமில்லை என்று நினைத்துக் கொண்டிருப்பவனிடம் எப்படி அன்னியோன்னியமாயும் நல்லெண்ணத்துடனும் சமத்துவமாய் இருக்க முடியும் என்பது நமது கேள்வி.

கொடுமை.

திருப்பூர் கதர் வஸ்திராலயம் ஒரு கண்டிப்பான வருணாசிரம பார்ப்பனர் தலைமையில் இருப்பதால் இதுவரையில் அதற்கு எதிர் அபிப்பிராய முள்ளவர்கள் எல்லாம் அதாவது சுமார் 8 பேருக்கு மேலாக வேலையிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 3 பேர்கள் தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள். மற்றவர்கள் சமபந்தி போஜனத்தில் சம்மந்தமுடையவர்களும் உயர்வு தாழ்வை ஒப்புக்கொள்ளாதவர்களுமே யாவார்கள். இந்த கொடுமையை மற்ற பார்ப்பனரல்லாத நிர்வாகிகள் அனுமதித்துக்கொண்டுதான் வருகிறார்கள். குற்றம் கண்டு நீக்குவதைப்பற்றி யாருக்கும் ஆக்ஷேபனை இருக்காது ஆனால் அக்குற்றம் அங்குள்ள யாரும் செய்யாதபடி திட்டப்படுத்திய குற்றமாக இருக்கவேண்டும். ஒரு கூட்டத்தார் செய்தால்—அதுவும் இரட்டிப்பாய்ச்செய்தால்—குற்றமாகக் கருதக்கூடாததை மற்றொரு கூட்டத்தார் செய்தால் ஒரே அடியாய் வேலையில் இருந்து நீக்கி விடுவது என்பது அக்கிரமமா இல்லையா என்றுதான் கேட்கிறோம். குறிப்பாக "தீண்டாதவர்கள்" விஷயத்தில் இவ்வளவு கொடுமை செய்யப்படுவது யோக்கியமானதா? கேள்விமுறை இல்லையா? இதற்காக நமது பணம் உபயோகப்படலாமா? என்பதுதான நமது முக்கிய கேள்வி. தவிரவும் தமிழ் நாட்டு கதர் ஸ்தாபன தற்கால நிர்வாகம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் அதுவும் அளவுக்குத் தக்கபடி வேண்டும் என்கிறவர் கைவசத்திலிருப்பதாக பெயர் செய்து கொண்டு இம்மாதிரி கொடுமைகள் நடப்பதானால் யெப்படி நாம் அனுமதிக்க முடியும்? ஒட்டு மொத்தத்தில் உத்தியோகங்கள் எறக்குறைய 100-க்கு 80 பங்கு பார்ப்பனர்களுக்கே கொடுக்கப்பட்டு வருகிறது பார்ப்பன பிரசாரமே முக்கியமாய் கருதப்படுகிறது. இந்தப் பணம் பார்ப்பனர்கள் சாப்பிடுகிறார்களே என்பதில் நமக்கு பெரிய கவலை இல்லையானாலும் இந்தப் பணம் பார்ப்பன பிரசாரத்திற்கு, வருணாச்சிரமத்திற்கு ஆதரவு கொடுப்பதற்கு, பார்ப்பனரல்லாதாருக்கு நேர் விரோதமாய் எதிர் பிரசாரம் செய்வதற்கு உபயோகப் படுகிறது என்பதை தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. "மக்கள் மக்களை தாழ்த்துவதைப் பற்றி, இழிவுபடுத்துவதைப் பற்றி நமக்கு கவலை இல்லை, கதர்தான் பிரதானம்" என்று மகாத்மா சொல்லுவாரானால், மக்களுக்கு மக்கள் தாழ்த்தப்படுவதை ஒழிப்பது கதரைவிட முக்கியமானது என்பது நமது கவலை என்பதை நாம் வலியுறுத்தித்தான் ஆகவேண்டியிருக்கிறது.

மகாத்மாவுக்கு பணம் கொடுக்கும் விஷயத்தில் கண்டிப்பாய் நமக்கு ஒரு நிபந்தனை இருக்கவேண்டும். "இந்தப் பணம் பார்ப்பன ஆதிக்கத்துக்கு போகாது, இது பார்ப்பனரல்லாதார் பங்கை பாதிக்கப்படவும் உபயோகப் படுத்தப்படாது, இனி வருணாச்சிரமக்காரரிடம் இதன் அதிகாரம் கொடுக்கப்படாது" என்கிற உறுதி இருக்கவேண்டும். அந்த உறுதி இல்லாமல் கொடுக்கப்படும் பணம் சங்கராச்சாரியாருக்கு கொடுக்கும் பணம்போல் மூடநம்பிக்கைக் காரரால் கொடுக்கப்படும் பணமாக போகுமேயல்லாமல் ஒருக்காலும் அது ஒரு நாணயமான பணமாகாது என்றே சொல்லுவோம். அன்றியும், மத சங்கராச்சாரிக்கு எப்படி ஒரு பார்ப்பனர் "சர்வாதிகாரி"யாய் இருந்து "லோக குருவை" ஆட்டுகிறாரோ அதுபோலவேதான் மகாத்மாவுக்கும் ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியார் சர்வாதிகாரியாய் இருந்துகொண்டு மகாத்மாவை ஆட்டுகிறார். சர்வாதிகாரி சொன்னபடிதான் மகாத்மா ஆடி ஆகவேண்டும் தமிழ்நாட்டில் ராமசாமி நாயக்கன் யோக்கியனா அயோக்கியனா என்று மகாத்மாவுக்கு தெரியவேண்டுமானால் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்தான் நற்சாக்ஷிபத்திர மளிக்கவேண்டும். "குருகுல ஆச்சாரியார்" ஸ்ரீமான் மகாதேவய்யர் யோக்கியரா அயோக்கியரா என்று தெரியவேண்டுமானால் ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார்தான் நற்சாக்ஷிப் பத்திரம் கொடுத்தாக வேண்டும். ஸ்ரீமான் மகாதேவய்யர் மகாத்மாவிடம் பக்கத்திலேயே இருந்துகொண்டு சதா பேசிக் கொண்டிருக்கிறாராம். பார்ப்பதற்கு நல்லவராகவே மகாத்மாவுக்குக் காணப்படுகிறாராம். எனவே மகாத்மாவுக்கு யோக்கியன் அயோக்கியனைக் கண்டுபிடிக்க எவ்வளவு சவுகரியமிருக்கிறது என்பது இதனாலேயே நமக்கு விளங்கவில்லையா? இவ்வளவும் மகாத்மாவைக் குற்றம் சொல்லுவதற்கு எழுதினதல்ல. ஆனால் மகாத்மாவும் எவ்வளவு தூரம் தொண்டருக்குள் அடக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது என்பதைக் காட்டவும், நம்மைப்பற்றியோ நமது நாட்டைப்பற்றியோ நமது சுயமரியாதையைப் பற்றியோ மகாத்மாவுக்கு உண்மை தெரிய எதாவது சந்தர்ப்பமிருக்கிறதா என்பதை பொது மக்களுக்கு தெரிவிக்கவும் இதை எழுதுகிறோம்.

வெளிப்பாளையம் 16-வது வார்டு ஓட்டர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

ஷை வார்டுக்கு 27—8—27ௗ சனிக்கிழமையன்று நெல்லுக்கடை தெருவிலுள்ள முனிசிபல் ஆண் பாடசாலையில் தேர்தல் நடைபெறப் போகிறது. "பொதுஜன ஊழியமே புனிதமார்க்கமென மதிக்கும் என்னை ஷை வார்டின் பிரதிநிதியாய் ஓட் கொடுத்து தேர்ந்தெடுத்தனுப்பினால் ஷை வார்டிலுள்ளவர்களுக்கும் பொதுவாய் நகர பரிபாலன சபைக்கும் செய்யவேண்டியவைகளை கவனித்து உற்சாகத்தோடு ஊழியம் செய்வேன்" என்று அ. சோக்கலிங்க முதலியார் அறிவிக்கிறார்.

ஈரோடு வரி செலுத்துவோர்

மகாநாடு.

இம்மாதம் 28—8—27 தேதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் பி.ஏ. எல்.டி. அவர்கள் தலைமையின் கீழ் ஈஸ்வரன் கோவில் வீதி நாராயண செட்டியார் பங்களாவில் நடைபெறும். எல்லோரும் வரவேண்டுமாய் கோருகிறோம்.

மீ. கா. முகமது சுல்தான் சாயபு
வரவேற்புத் தலைவர்.

20-7-27 } அ. பாஷா சாயபு.
ஈரோடு } காரியதரிசி.

திருவண்ணாமலை கோயில் வழக்கு.

"பிராமண மதத்தைக்கொல்ல வேண்டும்"

குறுக்கு விசாரணை முடியவில்லை.

மீண்டும் குறுக்கு விசாரணை 8—8—27 ல் தொடங்கப்பட்டது. அவக்கத்தில் திரு குப்புராவ் குறுக்கு விசாரணை செய்தார். இன்று கூட்டம் 8—8—27 தேதியைக்காட்டிலும்மிகுதியாய்இருந்தது. ஒருவர் மேல் ஒருவர் உட்கார்ந்தும் நின்று கொண்டும் இருந்தார்கள்.

கண்ணப்பரின் சாட்சியம்.

விநாயகர் கோயிலுக்குச் சாட்சிகள்யாராவது போனார்களோ இல்லையோ எனக்குத்தெரியாது. கிளிகோபுரப் படியிலிருந்து 1, 2 எதிரிகளும் ஓடுவதைப் பார்த்தேன், இவர்களுடன் வேறு எவரும் ஓடவில்லை. இவர்கள் இருவர் பெயரை நான் சிவப்பிரகாச முதலியாரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். ஆதிதிராவிடர்களுடன் சாப்பிடக்கூடாதென்று சில வைதிக நாயுடுகள் சொல்லுகின்றார்கள். சிலர் அவர்களைத்தொடக் கூடாதென்றும் சொல்லுகின்றார்கள். நான் பகிரங்கமாய் பல முறை அநேக ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிட்டுள்ளேன். ஆதிதிராவிடர்கள் வீட்டில்சாப்பிடுவதில்யாதொரு தோஷமும் இருக்கின்றதென்று நான் நினைக்கவில்லை.

எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. எனக்கு வயது 31. நான் ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிடுவதால் நாயுடுகள் எனக்குப்பெண் கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லை. இவ்வருடம் கூட குன்னத்தூரில் நாயுடுகள் வீட்டில் எனக்குப் பெண் கொடுப்பதாய்ச் சொன்னார்கள். ஆதிதிராவிடர்கள் வீட்டில் சாப்பிட்டதற்காக என்னைக் கோயிலுக்குள் வரக்கூடாதென்று தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது. தீட்டு என்பது இந்துக்களுள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எவரேனும் செத்தால் கருமாதியாகும் வரை இந்துக்கள் தீட்டு என்பதாக ஒன்றைக் கைக்கொள்ளுகின்றார்கள். இத்தகைய தீட்டு உடையவர்களும் கோயிலுக்குள் வரலாம் என்பது என் அபிப்பிராயம். தர்மகர்த்தாவுக்கு இவர்களைத் தடுப்பதற்கு அதிகாரம் இல்லை.

பிறகு திரு கண்ணப்பரை 2வது எதிரிக்காக வக்கீல் இராமசாமி ஐயர் குறுக்கு விசாரணை செய்யத்துவக்கினார். சென்ற ஓர் ஆண்டிற்குள் இக்கோயிலைத் தவிர வேறு எக்கோயிலுள்ளும் நான் புகவில்லை. நான் எத்தனையோ இடத்தில் பிரசங்கம் செய்தும் அந்த இடங்களிலுள்ள கோயில்களுக்குள் புகவில்லை. ஏனெனில் அக்கோயில்களை நான் முன்பே பார்த்திருக்கிறேன்.

என் பிரசங்கங்கள் அச்சடிக்கப் பட்டனவோ என்னமோ எனக்குத் தெரியாது. அவைகள் திராவிடனில் வெளிவந்திருக்கலாம். என்னுடைய பிரசங்கத்திற்குப் பிராமணர்களும் வருகின்றார்கள். ஆனால் அவர்கள் திருட்டுத்தனமாய் நின்று கேட்டுக்கொண்டிருப்பார்கள்,

நான் பிராமணர்களைத் துவேஷிக்க வில்லை. ஆனால் அவர்கள் வழக்க ஒழுக்கங்களையும், அவர்கள் மதமாய பிராமண மதத்தையும் நான் வெறுக்கின்றேன். பிராமண மதமென்றால் சங்கரமதமாகும். ஆகவே, சங்கரமதம் கொல்லப்பட வேண்டும். நான் சங்கர மதத்தின் கொள்கைகளைச் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய நூல்களில் சொல்லியுள்ளபடி படித்துள்ளேன். சங்கரமதமாய பிராமண மதத்தைக் கொல்ல வேண்டுமென்பதும் என் நண்பர்களதும் கொள்கையாகும். பிராமணரல்லாதாரில் இளைஞர்களெல்லாம் என் கொள்கையை பின்பற்றுகிறார்கள். பெரியோர்கள் அபிமானம் காட்டுகின்றார்கள்.

இன்னும் பிராமணரல்லாதார்கள் கர்ப்பக்கிருகத்தில் நுழைவதற்குத் துணியவில்லை. ஏனெனின் இப்பொழுதே நுழையுங்கள் என்று நான் சொல்லவில்லை. நான் நாட்டை இப்பொழுது பக்குவப் படுத்திக்கொண்டு வருகின்றேன். 3வது எதிரி ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்தவரோ அல்லவோ என்பது எனக்குத்தெரியாது. அவர் இக்கட்சியின் பிரசாரத்திற்கு ஏதோ உதவி செய்திருப்பதாய் அறிகின்றேன். அவர் என் கொள்கையை ஒப்புக்கொள்ளுகின்றாரோ என்னமோ எனக்குத்தெரியாது. ஆனால் அவர் பிராமண பொம்மை என்பதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன் அவர் ஓர் பிராமண பொம்மையாக விருந்தும் நான் அவரை வெறுக்கவில்லை. அவர்பால் பரிதாபப்படுகிறேன், பிராமணரல்லாதாருந்தான் சாதி வித்தியாசம் பாராட்டுகின்றார்கள் ஆனால் நான் சாதிவித்தியாசம் பாராட்டும் பிராமணனை வெறுப்பதுபோல் பிராமணரல்லாதாரை வெறுக்கமாட்டேன். ஏனெனின் சாதி வித்தியாசத்தை புகுத்தியவர்கள் பிராமணர்கள் தான். இதற்கு ஆதாரம் திருக்குறள், திருமூலம் முதலியன. என்னுடைய பிரசங்கம் பிராமணருக்கும் கூடத்தான். சில வைதிகப் பார்ப்பனரல்லாதார் ஆதிதிராவிடனைத் தம் வீட்டிற்குள் வரவிடுதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். ஆனால், என்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் ஆதிதிராவிடன் தம் வீட்டிற்குள் வருவதற்கு யாதொரு ஆட்சேபனையுங்கிடையாது. இன்னும் கலப்பு விவாகங்கள் நடைபெற வில்லை. நான் என் கொள்கைகளை ஒரு சமயமாகப் பிரசாரம் செய்து வருகிறேன். இது மக்களிடை பரவிக்கொண்டு வருகின்றது.

இந்து மதம் என்று ஒரு தனிமதம் கிடையாது. சைவம், வைணவம், சமணம், புத்த மதம் இவைகளெல்லாம் சேர்ந்தவைகளை இந்து மதமென்று சொல்லலாம். திருவண்ணாமலைக் கோயில் இந்து மதத்தின் ஒரு பகுதியைச் சார்ந்தகோயில், மற்ற பகுதியைச்சார்ந்தவர்களும்இக்கோயிலுக்குள் நுழையலாம். இதை இந்துக்களுக்குள் பெரும்பான்மையோர் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இன்னும் சிலகாலம்வரை பிராமணரல்லாதார் வீட்டில் நடக்கும் சடங்குகள் பிராமணரல்லாத குருக்களாலேயே நடைபெறவேண்டும். பிறகு இப்புரோகிதம் கூட ஒழியவேண்டும். பிராமண குருக்கள் இச்சடங்குகளைச் செய்யக் கூடாதென்பது என் கொள்கை. ஒரு முதலியார் வீட்டில் 'இந்து' என்று சொல்லிக்கொள்ளும் ஆதிதிராவிடன் புரோகிதம் செய்வதற்கு எனக்கு ஆட்சேபனை கிடையாது. தமிழிலேயே மந்திரங்கள் சொல்லப்படவேண்டும். "ஜஸ்டிஸ்"? பத்திரிகையின் பத்திராதிபரும் நானே 'ஜஸ்டிஸூம்' 'திராவிடனும்' ஒரே கணக்கு தான்.

சைவர்கட்கென்று சில ஆச்சாரம் உண்டு. பெரும்பான்மையான சைவர்கள் ஆதிதிராவிடர்களுடன் சாப்பிடலாமென்று நினைக்கின்றார்கள் எந்த விதமான ஆச்சாரத்துடன் இருந்தாலும் இந்து இந்துவே. அவனை ஜாதியை விட்டுத் தள்ள யாவருக்கும் அதிகாரம் கிடையாது.

6—2—27 தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுத்தார்களோ என்னமோ எனக்கு ஞாபகமில்லை. இந்த சாட்சிகளை எல்லாம் எனக்குத் தெரியும். சிலர் ரயில்வே ஸ்டேஷனில் எனக்கு அறிமுகத படுத்தப்பட்டார்கள், சிலர் நான் தங்கியிருந்த சத்திரத்திலும் அறிமுகப் படுத்தப்பட்டார்கள். நான் திருவண்ணாமலைக்கு வந்தால் முனிசிபல் சேர்மென் திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் வீட்டில் சாப்பிடுகிறேன். கோவில் கதவுகள் என்னைத் தடுப்பதற்குத் தான் மூடப்பட்டன. கதவை மூடியது என்னை அவமானப் படுத்தியதாகும். சாதாரண மனிதன் எவனும் இதை அவமானப்படுத்தியதாகவே எடுத்துக் கொள்வான்.

நான் 5—2—27 ல் கோயிலில் எல்லாரும் நுழையலாம், தரகர்களின்றி வணக்கம் செய்யலாம் என்று பிரசங்கம் செய்தேன். அன்று இரவு 11மணிக்குக் கூட்டம் முடிவுற்றது. நானே கோயிலுக்குள் போகவேண்டுமென்று விரும்பினேன். என் நண்பர்கள் எவரும் தூண்டவில்லை. கூட்டத்திலிருந்து நேராக 7-2-27 ல் கோயிலுக்குச் சென்றேன். அந்த 9 பேர்தவிர வேறு எவரும் என்னுடன் கோயிலுக்கு வரவில்லை. கோயிலுக்குள் குடுத்துணி போட்டுக்கொண்டு போவதைப்பற்றி கவலைப்பட வேண்டுவதில்லை. இந்த கோயிலுக்குள் குடுத்துணி போட்டுக்கொண்டு போகலாமோ போகக்கூடாதோ வென்பது எனக்குத் தெரியாது. செருப்பு போட்டுக்கொண்டு கோயிலுக்குள் போகக்கூடாது.

நான் கோட்டுடனும் சட்டுடனும் கோயிலுக்குள் சென்றேன். நான் முதல் குளத்திலோ இரண்டாவது குளத்திலோ கால் கழுவியதாக ஞாபகம் இருக்கிறது. நான் சுப்பிரமணியசாமி கோயிலைப் பார்க்கவில்லை. நான் அருணாசலத்தாரையே பார்க்கச்சென்றேன். எனக்கு வரதராஜுலு செட்டியார்தான் கோயில்காண்பித்துக்கொண்டுவந்தார். விநாயகர்கோயிலுக்குள் என்னை அழைத்துக்கொண்டுபோனார்களோ என்னமோ எனக்குத்தெரியாது. நான் பக்தியில் மூழ்கி இருந்தபடியால் எந்த இடத்தில் சாமியைக் கும்பிட கை தூக்கினேன் என்றும் எந்த இடத்தில் இறக்கினேன் என்றும் சொல்லமுடியாது. கதவை மூடி அவமானப்படுத்தியதும் என் பக்தி பறந்து போயிற்று. என்னை அவமானப் படுத்தியது கிளி கோபுரத்துக்கு வெளியில். கிளி கோபுரத்துக்கு வெளியிலும் உள்ளும் கோயில் சேவகர்கள் இருந்தார்கள் அச்சேவகர்களை நான் நேரில்கண்டால் யார் என்று தெரிந்து கொள்ளக்கூடும். கோபால்பிள்ளை பெயர் சொல்லி அழையாமல் டபேதாரே கதவைத் திற என்று சொல்லிக் கூப்பிட்டார். கதவு திறந்தவுடன் நான்தான் முதல் முதல் உள்ளே சென்றேன். பிறகு ஒவ்வொருவராய் இறங்கினார்கள் கோபால் பிள்ளை தான் கடைசியில் நுழைந்தார்.

இத்துடன் மாலை 5-30 மணி ஆகி விட்டது. குறுக்கு விசாரணை முடியவில்லை. கோர்ட்டு கலைந்தது. மறுபடியும் 25-8-27 ல் வாய்தா போடப்பட்டிருக்கின்றது. அன்று கண்ணப்பரை மேலும் குறுக்கு விசாரணை செய்யப்படும்.

(திராவிடன்)

புரோகிதமொழிந்த திதி.

பட்டுக்கோட்டை தாலூகா பேராவூரணியில் திரு நாராயணசாமி நாயுடு 15-8-27 ல் தன் தகப்பனருக்கு திதி கொடுக்கவேண்டியதினம் பார்ப்பன புரோகிதனை அழைக்காமல் தானே தன் தகப்பனாரை மனதில் நினைத்து ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களை வாசித்து கடவுளை வணங்கி தன் பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்தார் என்று ஸ்ரீமான் குப்புசாமி எழுதுகிறார்.

பார்ப்பனர் அக்கிரமம்.

பார்ப்பனர்கள் உத்தியோகத்திலும், சட்டசபைகளிலும், ஸ்தல ஸ்தாபனங்களிலும், பெரிய ஜமீன்களிலும், குடித்தனங்களிலும், இந்திய அரசாங்கங்களிலும் போய் அமர்ந்துகொண்டு இருப்பதின் முக்கிய நோக்கங்கள் இன்னவை என்பது நமது மக்களுக்கு சரிவர விளங்குவதே இல்லை. ஏதோ அவர்கள் படித்தவர்கள், அதனால் உத்தியோகம் பார்க்கிறார்கள், யார் உத்தியோகம் பார்த்தால்தான் என்ன, யார் சட்டசபைக்கு போனால்தான் என்ன, யார் கவுன்சிலரானால் தான் என்ன என்பதாக தர்மபிரசங்கம் பேசிவிட்டு பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாக வாழ்ந்தால் போதும் என்று நினைத்துவிடுகிறார்கள். இந்த ஏமாளித்தனத்தைப் பார்த்தே பார்ப்பனர்களும் நம்மவர்களை சுலபமாய் ஏமாற்றி பதவி பெற்று நம்மையே அழிக்கப் பார்க்கிறார்கள். எந்தப் பதவியில் பார்ப்பனர் இருந்தாலும் அதன் மூலம் நமது கழுத்தை அறுக்க அதை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதை நமது ஜனங்கள் உணருவதே இல்லை. அல்லாமலும், நம்மில் அநேகர் கொஞ்சமாவது சமூக அபிமானமின்றி மானம், வெட்கம் எல்லாவற்றையும் துறந்து பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகி பார்ப்பனர்கள் நமக்குச்செய்யும் கொடுமைக்கும் கையாளுமாக இருந்து நமக்கு கெடுதிசெய்தும் வாழ்கிறார்கள்.

நமதுநிலை நமது நாட்டு பார்ப்பனரல்லாத மக்கள் நிலை மிக மிக இழிவான தன்மையில் இருக்கிறதற்கு இதுவே போதுமான உதாரணமாகும். சென்னை கார்ப்பரேஷனில் சிலகாலமாக பார்ப்பனரல்லாதார் கவுன்சிலராகவும் அக்கிராசனராகவும் கமிஷனராகவும் இருந்து பார்ப்பனரல்லாத மக்களுக்கு நன்மைபுரிந்து வருவதைக்கண்ட பார்ப்பனர்கள் இவற்றை ஒழிக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் தேசத்தின் பேரால் காங்கிரசின் பேரால் சுயராஜ்யத்தின் பேரால் நம்ம ஆள்களிலும் சில அயோக்கியர்களையும் பைத்தியக்காரர்களையும் சேர்த்துக் கொண்டு, நமதுமக்களுக்கும் நமது இயக்கத்துக்கும் விரோதமாக பிரசாரங்கள் செய்து, மக்களை ஏமாற்றி, ஓட்டுப்பெற்று கார்ப்பரேஷனுக்கு வந்து, அவர்கள் செய்த அக்கிரமங்களும் அயோக்கியத்தனங்களும் கொஞ்சமல்லவென்பது கவனித்துவந்தவர்களுக்கு விளங்காமல் போகாது. ஸ்ரீமான் தணிகாசலம் செட்டியார் தலைவராயிருந்தபோது அவர் ஒரு பார்ப்பனரல்லாதாராகவும் பார்ப்பனரல்லாதார் விஷயத்தில் கவலை செலுத்துபவராகவும் இருந்ததற்காக அவருக்கு பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமைகள் செய்தார்கள் என்பதும், அதற்கடுத்தாற்போல் ஸ்ரீமான் சாமி வெங்கிடாசலம் செட்டியார் பார்ப்பன சிஷ்யராகவும் பார்ப்பனர்கள் "போடு கரணம் என்றால்" "இதோ போடுகிறேன் எண்ணிக்கொள்" என்றும் எவ்வளவோ பொய்யும் புரட்டும் பேசிவந்தும் கொஞ்சமும் சுயமரியாதை இல்லாமல் நடந்துவந்ததால் அவரை ஆதரித்ததும், அதற்குப் பிறகு ஸ்ரீமான் ஜி. நாராயணசாமி செட்டியார் பிரசிடெண்டாய் வந்தவுடன் அவர் பார்ப்பனர்கள் சொற்படி கேட்காததால் அவர்மீது பலரை ஏவிவிட்டு கார்ப்பரேஷன் யோக்கியதையையே கெடுத்து கள்ளுக்கடை சாராயக்கடைகள்போல் சதா சர்வகாலமும் கூச்சலும் குழப்பமுமாகவே இருக்கும்படி நடந்துவந்ததும் யாவருக்கும் தெரிந்ததாகும். தவிர சென்னை கார்ப்பரேஷனில் கமிஷனராயிருக்கும் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் பார்ப்பனரல்லாதாராய் இருக்கிறார் என்கிற காரணத்திற்காக அவரை இந்த பார்ப்பனர்கள் எவ்வளவு கொடுமை செய்கிறார்கள் என்பது கவனித்து வருபவர்களுக்கு விளங்கி இருக்கும். ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் ஒரு ஜில்லா கலெக்டர் உத்தியோகஸ்தர். அவர் இன்ஸ்பெக்டர் ஆப் ரிஜிஸ்டிரார் என்கிற பத்திரப்பதிவு இலாக்காவுக்கு இந்த மாகாணத்திற்கே தலைவராக இருந்தவர். அவருடைய யோக்கியப் பொறுப்பைப் பற்றியாவது நாணயத்தைப்பற்றியாவது இதுவரை அவருடைய பார்ப்பன எதிரிகள் ஒரு வார்த்தையாவது சொன்னது கிடையாது. அவர் கார்ப்பரேஷனுக்கு கமிஷனரான பிறகு வருஷத்தில் லக்ஷக்கணக்கான ரூபா சென்னை முனிசிபாலிட்டிக்கு லாபம் வருகிறது. ஆபீசு சிப்பந்திகளின் அக்கிரமங்கள் எல்லாம் ஒழிக்கப்பட்டு யோக்கியமாய் நடைபெற்று வருகிறது. லஞ்சம் வாங்கின உத்தியோகஸ்தர்களை மிக தயவாகவும் தீர்மானமாகவுமே தண்டித்து வருவார். அப்படி இருந்தும் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா மிகவும் கடுமையாய் தண்டிக்கிறார் என்றும், பார்ப்பனரைக் கொடுமைப்படுத்துகிறார் என்றும் அவர்பேரில் பார்ப்பனர்கள் குற்றம் சுமத்தினதின் பேரில் சில குற்றங்களை கோர்ட்டுக்கு இழுத்து விட்டதில் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் மாதக்கணக்காய் கடுங்காவல் தண்டனை தண்டிக்கப்பட்டு விட்டார்கள். இவ்வளவு கிரமமாய் வேலைபார்த்து வருபவரை அவமானப்படுத்துவதும் அற்பத்தனமாய் பேசுவதும் வேண்டுமென்றே குறைவுபடுத்துவதுமாய் குறும்பு செய்துவருகிறார்கள். இந்த விஷயம் வரவர முற்றிப்போய்விட்டதால் பார்ப்பனர்களின் வாலபிடித்து திரிந்துகொண்டிருந்த சில பார்ப்பனரல்லாதார்களுக்கும் கூட இந்தக் கொடுமை சகிக்காமல் இப்போது புத்திவந்து அவர்களே ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் விஷயத்தில் தாராளமாய் தங்களது அபிப்பிராயங்களை வெளியிட்டுவிட்டார்கள். சுத்தமான பார்ப்பனரல்லாத இரத்தம் கடுகளவு அந்த பார்ப்பனரல்லாதார் சரீரத்தில் ஓடுவதாயிருந்தாலும் அவர்களுக்கு எப்போதாவது பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி வந்தே தீரும் என்பதற்கு இது ஒரு பெரிய உதாரணமாகும். பார்ப்பனர்களின் கக்ஷியைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் சிங்காரவேலு செட்டியாரும் கெ. தோங்கப்ப நாயுடுவும் ஜி. வெங்கிட்ட நாராயணா விஷயமாய் பார்ப்பனர்களின் கூற்றைப் பற்றி பேசியிருக்கும் விஷயமாவது "நான் காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தவன், எதிர்கக்ஷிக்காரன், ஆனபோதிலும், என்கடிதங்களுக்கு கமிஷனர் ஸ்ரீமான் வெங்கிட்ட நாராயணா அவர்கள் ஆறுமணி நேரத்திற்குள்ளாகவே பதில் எழுதிவிட்டு அப்போதைக்கப்போது நான் எழுதும் குறைகளையும் நிவர்த்தி செய்து எனது வேண்டுகோளை நிறைவேற்றி இருக்கிறார். அவர் யாரிடத்திலும் பக்ஷபாதமாக நடந்தது கிடையாது"

ஸ்ரீமான் கெத்தாரங்கப்ப நாயுடு பேசியதாவது. "நான் இச்சபைக்கு மெம்பராக வந்ததிலிருந்து எவ்விஷயத்தைக் குறித்தறிவித்தாலும் கமிஷனர் உடனே அதைக்கவனித்து நிறைவேற்றி வருகிறார். அவ்வாறிருக்க அவர் பக்ஷபாதமாக நடந்துவருவதாய்ச் சொல்வது முற்றும் தவறு" என்பதாக பேசியிருக்கிறார்கள்.

மற்ற ஸ்தலஸ்தாபனங்களில் உள்ள நிர்வாகத்தலைவர்கள் இந்த இரட்டை ஆட்சியில் அதிலும் தற்கால சுப்பராய மந்திரி ஆட்சியில் நடக்கும் அக்கிரமங்களுக்கு கணக்குவழக்கு இல்லை. அவைகளைப்பற்றி ஒரு பார்ப்பனராவது கவனிப்பதில்லை. பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்துவிட்டால் அந்த நிர்வாகஸ்தர் என்ன அக்கிரமம் செய்தாலும் கேள்விகிடையாது. பார்ப்பனர்களுக்கு அடிமையாகாவிட்டால் அவர் எப்படிப்பட்டவராயிருந்தாலும் அவர்களை ஒழிக்க எவ்வளவு இழிதொழிலையும் செய்கிறார்கள் என்பதற்கு இதை ஒரு உதாரணமாகவே எழுதினோம்.

பொள்ளாச்சி.

நேற்றையதினம் நடைபெற்ற பொள்ளாச்சி முனிசிபல் கௌன்சில் 2-வது வார்டில் அபேட்சகராகநின்ற இருவரில் ஸ்ரீமான் முத்துசாமி செட்டியார் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று கோவை கோசம் [illegible] ஸ்ரீமான் ராம்ஜி அவர்கள் எழுதுகிறார்.

உறையூர் அங்கவஸ்த்திரங்கள்.

அசல் 100 நெ. நூலில் தயார் செய்யப் பெற்றது. பலராலும் நன்கு மதிக்கப் பட்டது. தினப்படி உபயோகத்திற்கு "ஜரை" கம்பி சதா அங்கவஸ்திரங்களை உத்தியோகஸ்தர் முதல் ஏழைவரை சாதாரணமாக உபயோகிக்கலாம்.

23/4 அகலம் 5 முழம் 1க்கு ரூ 1—12—0
ஷெ சரிகை சீர் 1க்கு ரூ 1—14—0

தபால் செலவு வி. பி. வேறு

மற்றும் ஜவுளி வியாபாரிகளுக்கு வேண்டிய சரிகை போட்ட 200 நெ துப்பட்டாக்கள் முதலியனவும்கிடைக்கும். கமிஷனுக்கு சகாயமாக ஆடர்படி வாங்கி அனுப்பப்படும்.

மற்ற விபரங்களுக்கு எழுதகோருகிறோம்.

விலாசம் மானேஜர்

ஸ்ரீ சௌடாம்பிகா
ஜவுளி வர்த்தகசாலை
உறையூர் போஸ்டு
திருச்சி

திருப்பூரில் பல மகாநாடுகள்.

பொம்மனுக்கும் திம்மனுக்கும் சம்பாஷணை.

(திருக்கோவையான் எழுதுவது.)

பொம்மணன் :— திருப்பூரில் என்ன என்ன மகாநாடுகள் நடக்கப்போகிறது.

திம்மணன் :—ஒன்று "கோவை ஜில்லா மகாநாடு" மற்றொன்று "கோவை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு."

பொ:—ஜில்லா மகாநாடு என்றால் என்ன; ஜில்லா மகாநாடு என்பது ஜில்லா அரசியல் மகாநாடா? ஜில்லா காங்கிரஸ் மகாநாடா? ஜில்லா ராமலிங்கம் செட்டியார் மகாநாடா? ஜில்லா வெள்ளியங்கிரி கவுண்டர் குடும்பத்தார் மகாநாடா? ஜில்லா ராமலிங்கம் செட்டியாருக்கும் வெள்ளியங்கிரி கவுண்டருக்கும் முறையே உத்தியோகமும் சட்டசபை மெம்பர் முதலியதும் கிடைக்கச்செய்கிற தந்திர மகாநாடா? அல்லது மந்திரி டாக்டர் சுப்பராயனைக் காப்பாற்றப் போவது போல் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளச்செய்யும் மகாநாடா? கவர்னர் பிரபுவும் சர். சி. பி. அய்யரும் சந்தி சிரிக்கும்படி ஆக்கி விட்டதே அதற்கு சிபார்சுக்கு வருகிறவர்கள்போல் வேஷமபோட்டு, கவர்னரிடமும், சர். சி. பி. யிடமும் கூலிவாங்கும் மகாநாடா? என்ன சங்கதி ஒளிக்காமல் தைரியமாகச் சொல்லு பார்ப்போம்.

திம் :— அப்படியெல்லாம் இல்லையப்பா: கோயமுத்தூரில் கூடிய மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத் தீர்மானத்தை நிராகரிக்கவும் மந்திரிசபைக்கு ஆதரவளிக்கவும் கூட்டப்படுகிறது என்கிறார்கள்.

பொ :—கோயமுத்தூர் ஜில்லா மகாநாடு இந்த விஷயத்திற்கு கூட்டப்படுவதானால், கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்பதாக ஒன்று எதற்கு?

திம் :—சரி சரி, இப்பத்தான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. முன்னே சொன்னதை மறந்துவிடு. கோயமுத்தூர் ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்பதுதான் அடி மாகாணப் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுத்தீர்மானங்களை நிராகரிக்கக்கூட்டப்படுகிறது.

பொ :—சரி அப்படியே வைத்துக்கொள்வோம். அப்படியானால் மற்று வேறே ஒரு ஜில்லா மகாநாடு எதற்காக?

திம் :—அந்த சங்கதி நமக்குந்தான் விளங்கவில்லை.

பொ :—சரி உனக்கு விளங்காவிட்டால் நல்ல காரியமாச்சுது. மகாநாட்டைக் கூட்டுகிறவர்கள் என்னதான் சொன்னார்கள்?

திம் :—அவர்கள் என்ன சொல்லுவார்கள் அவர்களுக்கே தெரிந்தால்தானே ஏதாவது சொல்லுவார்கள். அது ஒன்றுமில்லை. சர். சி. பி. கோயமுத்தூர் மகாநாடு முடிந்தவுடன் கோவை ஸ்ரீ ராமலிங்கம் செட்டியார் வீட்டுக்கு வந்தார். என்ன இப்படி ஆய்விட்டதே! என்று ஒருவருக்கொருவர் துழவு விசாரித்துக்கொண்டார்கள். பிறகு விருந்து சாப்பிட்டார்கள். விருந்து தான் தெரியுமே. அந்த சந்தோஷத்தில், ஒரு "மகாநாடு கூட்டி, கோயமுத்தூர் தீர்மானத்தைக் கண்டித்து ஒரு தீர்மானம் செய்து கவர்னருக்கு அனுப்பிவிடு. உனக்கு 2000 ரூபாய் சம்பளத்துக்கு குறையாத உத்தியோகம் ஒன்று ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்று சொன்னார். அதைக்கேட்டதும் ஸ்ரீமான் செட்டியார், "எனக்குத்தான் உத்தியோகமாச்சுது. எப்போதும் என் பேச்சைத் தட்டாமல் கேள்கிற ஸ்ரீமான் வெள்ளியங்கிரிகவுண்டருக்கு என்ன சொல்லுகிறீர்" என்று கேட்டார். அதற்கு, கவுண்டருக்கு ஒரு பட்டமும், அவர் தம்பிக்கு ஏதாவது ஒரு உத்தியோகமும் கிடைக்கும்படி சிபார்சு செய்கிறேன்" என்று சொல்லிப் போய் விட்டார். இவ்வளவுதான் நடந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த அவசரத்தில் மகாநாட்டைக் கூட்டி விட்டார்கள். இன்னது செய்வது என்பது அவர்களுக்கே இன்னமும் விளங்கவில்லை. விழிக்கிறார்கள்.

பொ.—அப்படியிருந்தால் 'கோயமுத்தூர் ஜில்லா மகா நாடு' கூட்டவேண்டும் என்கிற நோட்டீஸில் 40, 50, பேர் கையெழுத்துப் போட்டிருக்கிறார்களே அது எப்படி?

திம்:—எப்படி யென்று கேட்கிறாய் அதில் அநேகம்பேரிடம் கேள்க்காமலே, நம்பிக்கையின் பேரில் கையெழுத்துப் போட்டுக்கொண்டார்கள். சிலரிடம் தாக்ஷண்யத்திற்கு வாங்கினார்கள். சிலரிடம் ஜாதியாபிமானம் சொல்லி வாங்கினார்கள். சிலரிடம் வேறு விதமாய்த் திரித்துச்சொல்லி வாங்கினார்கள். சிலரிடம் அவர்களுக்குக் கவலையுள்ள காரியத்தை அனுகூலப்படுத்திக்கொடுப்பதாக வாங்கினார்கள். சிலர் எதற்கும் அட்டி சொல்லாமல், படித்துக்கூடப் பார்க்காமல் கையெழுத்துப் போட்டு விடுவதுண்டு. அந்தமாதிரி ஆசாமிகளின் கையெழுத்தையும் பெற்றுக்கொண்டார்கள். தவிரவும் மகாணப் பார்ப்பனரல்லாதார் மகாநாடு கூட்டியவர்கள் சிலரை பணம் கேள்க்கவில்லையாம். சிலருடைய பெயரை அந்த வரவேற்பு நிர்வாக கமிட்டியில் போடவில்லையாம். சிலரிடம் அக்கடி போய் யோசிக்கவில்லையாம். இந்த காரணங்களால் சிலர் கையெழுத்து போட்டார்கள். மற்றும் சிலர் சங்கதி உனக்கே தெரியும். இப்படி கையெழுத்து நிரம்பி விட்டது. இதனுலென்ன? இரண்டு மகாநாடு ஏற்பட்ட காரணம் என்னவென்றால், திருப்பூரில் 5 தேதி கூடின கூட்டத்தில் மகா நாட்டின் பெயரைப்பற்றி நெடுநேரம் தர்க்கம் நடந்தது. அதன் பயனாய் இரண்டு மகாநாடு முளைத்து விட்டது.

பொ:—பெயருக்கு என்ன தர்க்கம்.

திம்.—ஸ்ரீமான் வெள்ளியங்கிரிக் கவுண்டருக்கு பார்ப்பனரல்லாதார் என்கிறபெயர் பிடிக்கவில்லையாம். பார்ப்பனரில்லாமல் ஒரு காரியமும் நடக்காதாம். ஆதலால் அவர்களை நீக்கி ஒரு காரியமும் செய்ய தனக்கு இஷ்டமில்லையாம். அதன்பேரில் பார்ப்பனர்களையும் சேர்த்து காரியம் நடத்துவதற்கு ஜில்லா மகாநாடும், அவர்கள் இல்லாமல் காரியம் நடத்த பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாடும் நடத்தலாம் என்று ஸ்ரீமான் ராமலிங்கம் செட்டியார் யோசனை சொன்னார். எல்லோரும் சரி, சரி, சரி, சரி என்று சொல்லிவிட்டார்கள். அதுதான் இரண்டு மகாநாடு கூட்டக் காரணம். அதாவது பார்ப்பனரையும் பார்ப்பனரல்லாதாரையும் ஆகிய இரண்டு பேரையும் திருப்திசெய்ய.

பொ:—பார்ப்பன ரல்லாதார் பெயரே தனக்கு பிடிக்கவில்லை யென்று சொன்ன ஸ்ரீமான் வெள்ளியங்கிரி கவுண்டர் பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாட்டுக்கு எப்படி காரியதரிசி வேலையை ஒப்புக்கொண்டு நடத்துகிறார்?

திம்:—அது ராஜிக்காகவும் ஸ்ரீமான் செட்டியாருக்காகவும் ஒப்புக் கொண்டார்.

பொம்:—பார்ப்பன ரல்லாதார் மாகாண மகாநாட்டுக்கு எப்படி பணம் கொடுத்தார்?

திம்:—அது நம்பிக்கொடுத்துவிட்டாராம்

பொ.—என்ன நம்பிக்கை?

திம்:—பார்ப்பனர்களை திட்டமாட்டார்கள் என்று நம்பிக் கொடுத்தாராம். பிறகு மகாநாட்டில்வந்து பார்க்க அதிகமாக திட்டுவது தனக்கு காது கேட்டதாம். உடனே வெளியில் வந்துவிட்டாராம்.

பொம்:—நான் அதைப்பற்றி கேள்க்கவில்லை. பார்ப்பனரல்லாதார் பெயர் பிடிக்காதவர் பார்ப்பன ரல்லாதார் பெயரால் நடக்கும் மகாநாட்டுகளுக்கு எப்படி பணம் கொடுத்தார், இப்போது எப்படி காரியதரிசியாய் இருக்கிறார். திட்டுவதும் வைவதும் சரியா தப்பா என்பதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.

திம்:—சரி அப்பா, இதுதான் பிரமாதமாய்போச்சுது உனக்கு. என்னமோ சமயத்துக்கு நினைப்புக்கு வந்ததைச் சொன்னார். அதனால் என்ன இப்ப பிரமாதமாக முழுகிப் போச்சுது?

பொ:—அது எப்படியோ போகட்டும் மாகாண பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் நடந்த எந்த தீர்மானத்தை கண்டிக்கப்போகிறார்கள்? அதையாவது கொஞ்சம் சொல்லு பார்க்கலாம்.

திம்:—அதா? அது மகாநாடு கூட்ட ஏற்பட்ட நோட்டீஸில் "மாகாண சுயாட்சி கிடைக்கும் வரையில் மந்திரிவேலை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும் இப்போது இருந்து வரும் மந்திரிகளிடம் நம்பிக்கையில்லை என்றும், மகாண கவர்னரிடத்தில் நம்பிக்கையில்லை யென்றும் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்கள் பெரும் பான்மையோர் அபிப்ராயத்திற்கு விரோதமாயிருப்பதால் உண்மையான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவேண்டும்" என்று எழுதி யிருக்கிறது, 8—8—27ல் 'சுதேசமித்திரனில்' "நேற்று சுயேச்சை மந்திரிகளை ஆதரிக்கும் நோக்கத்துடன் திருப்பூரில் ஒரு பெரிய கூட்டம் கூடியது என்று நமது நிருபர் எழுதுகிறார்" என்றும் 8—8—27ல் 'சுதேசமித்திரனில்' "இப்போதுள்ள மந்திரிசபையை ஆதரிக்கவும் திருப்பூரில் ஜில்லா பிராமண

நல்லாதார் விசேஷ மகாநாடு கூடுகிறது" என்பதும் கண்டிருக்கிறது. இவ்வளவு தான் நமக்குத் தெரியும்.

பொ:—சரி அப்படியானால் மந்திரிகளை ஆதரிக்கவும் ஸ்ரீமான்கள் செட்டியாருக்கும் கவுண்டருக்கும் எந்த விதத்தில் யோக்கியதை இருக்கிறது. ஸ்ரீமான்கள் செட்டியாரும் கவுண்டரும் தங்களை காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் செட்டியார் சங்கதி ஒரு புறமிருக்கட்டும். அவருக்குஇவ்வளவு ஒரு கட்சி ஏற்படுத்த சக்தி உண்டு. அவைகளைக் கொலை செய்யவும் சக்தியுண்டு. அதோடு அவர் வக்கீல். அது அப்படியே கிணற்றில் கல்லுப் போட்டது போல இருக்கட்டும் பிறகு பேசலாம்.

பொ:—ஸ்ரீமான் கவுண்டர் காங்கிரசுக்காரரென்று இந்த மாதத்தில்கூட சொல்லிக்கொண்டாரே காங்கிரசுக்காரர் எப்படி மந்திரி வேலை ஏற்றுக்கொள்ளுவதை—மந்திரிகளை-கவர்னரை ஆதரிக்கலாம்? காங்கிரசுதானே இவைகளை கூடாது என்று சொல்லுகிறது. அப்பேர்ப்பட்ட ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கூட இருட்டுத்தனமாய்த்தானே இவைகளை ஆதரிக்கும்போது, ஸ்ரீமான் கவுண்டர் எந்த முறையில் இப்படி வெளிப்படையாய் ஆதரிக்கிறார். அல்லாமலும், கவர்னரிடமும் உத்தியோகத்தினிடமும் இவர்களுக்கு இப்போது திடீரென்று இவ்வளவு அபிமானம் வருவானேன்? இவர்கள் இருவரும் சட்டசபையை விட்டு வெளி வந்த வீரர்கள் அல்லவா?

திம்:— என்னப்பா நீ சத்திய லோகத்து மனுஷனைப்போல் பேசுகிறாய், ஏதோ அரசியலில் பிரவேசத்தால் இவைகள் எல்லாம்இருக்கத்தான் செய்யும், நாட்டுக்கு நன்மையும் ஒரு அரசியல் தான், ஒரு சமூகத்துக்கு நன்மையும் அரசியல்தான் தனக்கே நன்மையும் ஒரு அரசியல்தான், இவைகள் எல்லாம் அரசியல் போரால் செய்வது அரசியல்காரர் என்போர்களின் பொதுவான தர்மம், அரசியல் என்றாலே சூழ்ச்சி, தந்திரம் என்றுதானே அகராதி அர்த்தம். இப்படியிருக்கையில் இந்த மாதிரி கனவான்களின் அரசியலைப்பற்றி பேச வேண்டுமா.

பொ:— அப்படியானால் மற்றவர்களின் பெயரைக் கெடுப்பானேன?

திம்:— யார் பெயர் கெட்டுவிட்டது. கையெழுத்துப் போட்டவர்கள் யாரும் குழந்தை அல்ல. இந்த கனவான்களைத் தெரியாதவர்கள் அல்ல, பெரும்பாலும் அவரவர்களுக்கு அவசியமும், அவரவர்கள் சிக்கியிருக்கும் சிக்குவாரும் அவரவர்களின் ஆசையும் தாட்சண்யமும் தான் இப்படி செய்ததே ஒழிய எல்லோரும் தெரியாமல் ஏமாந்து விட்டார்கள் என்று சொல்ல முடியாது. அன்றியும் இம்மாதிரியாரோ 2 பேர் பயனடைய பலபேரை ஏமாற்றுவதும், சில பொது நலங்களைப்பலி கொடுப்பதும் எங்கும் வழக்கம் தானே ஒழிய வேறில்லை. நமது நாட்டில் இது சமயம் பொதுவாக வேளாள குலத்தவர்களுக்கு நல்லபெயர் இருக்கிறது, கொஞ்சம் பழய பெருமையும் இருக்கிறது, இந்த ஜில்லா பெரும் பாகமும் வேளாளரைக் கொண்டது என்கிற காரணத்தால் சகல காரியங்களும் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளிலிருந்து தப்பிமுன்னேறுவதற்கு இடமும் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஸ்ரீமான் செட்டியாரவர்கள்சுயநலமும், அவரது பேச்சைக்கேட்டு ஆடும் இரண்டொரு வேளாளப் பிரமுகர்களுடைய சுய நலமும் இவ்வளவையும் கெடுத்து பாழாக்கப்போகிறது. அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்.

ஆனாலும்; எல்லோரையும் அப்படி நினைத்துவிட முடியாது. அதிலும் பல கனவான்கள் இருக்கிறார்கள். இத்தப்புரட்டுகளையும் வெகு பேர் வெறுக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். சிக்குவாரில் சிக்காத வெகு கனவான்கள் இக்கூட்டத்தை வெறுத்திருக்கிறார்கள். உதாரணமாக ஒரு வேளாள கனவான் கையெழுத்துப் போட மறுத்து விட்டதோடு இது சரியான காரியமல்ல என்று கண்டித்து விட்டார். மற்றொரு கனவான கூட்டத்துக்கு இடமே கொடுக்க மறுத்துவிட்டார், மற்றும் சில கிராமத்து கனவான்கள் இது நியாயமான காரியமல்ல. இதற்குப் பணம் கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். மற்றொரு கனவான், "இப்பொழுது இதெல்லாம் இவர்களுக்கு சிரிப்பாகத்தானிருக்கும். நாளைக்கு எங்களிடம் வந்து, நீயும் வேளாளர். நானும் வேளாளர் என்றுசொல்லி ஓட்டு கேட்க்க வரும்போது இதையெல்லாம வட்டி முதலோடு கேட்கப்போகிறேன்" என்று சொன்னார்.

இம்மாதிரி எத்தனையோ கனவான்கள் ஜமீன்தாரர்கள், மிராசுதாரர்கள், பெருங்குடித்தனக்காரர்கள், வியாபாரிகள் ஆகிய எத்தனையோ வேளாள கனவான்கள் இந்த காரியத்தை உணர்ந்துதான் இருக்கிறார்கள். இதற்கு அடையாளம் மகாநாடு நடப்பதைப்பார்த்தாலே நீ தெரிந்து கொள்வாய். அல்லாமலும் ஸ்ரீமான் செட்டியாருக்கும் இனியாருடைய தயவும் எந்த வேளாள கனவானுடைய தயவும் வேண்டியதில்லை. ஏனெனில் அவருக்குத்தான முன்சொன்னதுபோல் ஒரு உத்தியோகம் மாதம் 2000 ரூ சம்பளத்திற்கு குறையாமல் வரப்போகிறது. ஆதலால் யார் எப்படியானால்தான் அவருக்கு என்ன?

பொ:—இதற்கு பிரதிநிதிகள் யார்? அவர்களுக்கு நிபந்தனைகள் என்ன? திட்டம் என்ன?

தி:—அதெல்லாம் கேள்க்காதே வாழைக்கம்பம் கட்டி மேளவாத்தியமடித்தால் யாரோ நாலுபேர் வேடிக்கை பார்க்கவாமல் போகமாட்டார்கள்

பொ:—சரி சரி அவ்வளவுதானா அதற்கு கொள்கை விதி நிபந்தனை, சந்தா ஒன்று பிரதிநிதி டிக்கட்டு இவைகள் ஒன்றும் வேண்டாமா?

தி:—நான்தான் முன்னமேயே சொல்லிவிட்டேனே.

"திராவிடன்"

பழநி சி. எம். சாமி.

குருதாம்பரபஸ்பம்

சகல வியாதிகளுக்கும் கைகண்டது,

திமிர், குஷ்டம், ரணம், சூலை, கிரந்தி, பத்து மேகம், தடிப்புகள், மாறி விட்டது ஆராத குழிப்புண் ஆறிவிட்டது. இருமல் குன்மம், வெள்ளை, வெட்டை பவுத்திரம், மூலம், நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய எல்லா வியாதிகளும் தீர்ந்துவிட்டதென்று தினம்நற்சாட்சிகள் வந்த வண்ணமாயிருக்கின்றன. வியாதிகளை விபரமாய் எழுதவும்.

50 நாள் 100வேளைபஸ்பமும் அனுப்பானமும் விலை ரூ. 50 25 நாள் 50 வேளை பஸ்பமும் அனுபானமும்விலை ரூ. 25 ஏழைகளுக்குப்பாதிவிலை

இனமாய் குருதாம்பரபஸ்பம் மாதிரி பாக்கெட் விரும்புவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்

நற்சாட்சி:—ஒரு ஊரில் இரண்டு தீராத ரோகஸ்தர்கள் நமது குருதாம்பரபஸ்பத்தால் பூர்ண குணம் பெற்றுவதை கவனியுங்கள்

எமது ஊரில் உங்கள் பெயர் சூரியனைப்போல் பிரகாசிக்கிறது. மேகவியாதியால் ஒண்ணரை வருஷகாலமாய் படுக்கையிலிருந்தவன் குருதாம்பரபஸ்பத்தால் பூர்ணகுணமானான் மூல வியாதியால் கஷ்டப்பட்ட மற்றொருவன் பூர்ண குணமானான் ஆனதால் என் வியாதிக்குத் தகுந்த மருந்தனுப்பக் கோருகிறேன்.

A M. துரைசாமி, 80-நிர் மார்க்கட் ரோடு, சூளை பெங்களூர் 11—4—27

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய ஆபீஸர்களின் நற்சாட்சிகளையும் நமது கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேதவைத்திய ஆசிரியர்,

C. மலையப்பசாமி. நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத்தெரு ஜி. டி. சென்னை

$ 500 இனம்! $ 500 இனம்!!

சதானந்த யோகீஸ்வரருடைய **மகா வீரியவிருத்தி லேகியத்தை**

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவரேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (திங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டுசெய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தனவந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை கெட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி தீர்க்காயில் தீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.

உறுதிமொழிப் பத்திரம்.

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S. ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்திர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான இ. வீராசாமி நாயுடு அவர்கள்.
ஆயுள்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுள்வேத சித்தவைத்திய பூஷணம்.
சூ. லாஸாஸ் பண்டிதன் ஸ்ரீமத்-T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ M. நடராஜ பிள்ளை.

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு. உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75.

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனா ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது

மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, தரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலயம், திருச்செங்கோடு (S I.)

மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி.-பி. வேறு கேட்லாக் இனம்.

ஆனந்த நிலயம், திருச்செங்கோடு S. I-

சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனம் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலயம், திருச்சங்கோடு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பாகிங் தபால்செலவு இனம் விலை ரூ. 6—8—0

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

(பராபரமே தெய்வம்)

தபசிரேஷ்ட முனிவர்கள் அருள் பெற்றது !! இதுவரை வெளிவராதது !!

வைத்திய முறைகளை யூகித்தறிந்து கற்றுணர்ந்தது !! இனிமேல் காணக்கூடாதது !!

மகா தாம்பர சுன்னம்.

ஏன் கவலைப்படுகிறீர்கள் ! உங்கள் பயம் தீர்ந்து விட்டது !
ரணகுஷ்டம் தீர்ந்து விட்டது சகலரோகங்களும் ஒழிந்து விட்டது.

எத்தனை நாளைக்கு இந்தக் கஷ்டம், எத்தனை நாளைக்கு மூலையிலேயே இருப்பது தெய்வமே! எனும் அபச்சாரம் வேண்டாம். இனறே உங்கள் கஷ்டம் தீர்ந்தது. இது ஓர் மஹானால் அனுக்கிரகிக்கப் பெற்றது.

குஷ்டம் புண்களில் கட்டியிருக்கும் கட்டுகளை ஒருவாரத்திற்குள் அவிழ்த்தெறிந்து ரணங்களை ஆற்றி புண்களில் உள்ள தோல்களெல்லாம் சுருங்கி விடுகிறது. பற்று, அறிப்பு, தடிப்பு, நாற்றம் தேமல், சொரிகளெல்லாம் தானே விட்டு தகடு தகடாக பெயர்ந்து உதிர்ந்து விடுகிறது, சுருக்கிச் சொல்லில் குஷ்டப்புழுக்கள் மடிந்து குஷ்ட விஷநீர்கள் வேறற்று விடுகிறபடியால், கை, கால், மூக்கு, அழைத்து, தடித்து, சுணைத்து, வீங்கி, புண்ணுகி, அரித்து தின்றுவரும் ரணங்களெல்லாம் ஆறி, வெண் குஷ்டம், கருங்குஷ்டம், செங்குஷ்டம், படர் குஷ்டம், குஷ்டமேகங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து கால் ஆணி, சீழ் வெடிப்பு, மதமதப்பு, விருவிருப்பு, கட்டி, கரடு, திமிர் குஷ்டம், குஷ்டமேகங்களெல்லாம் நிர்மூலமாகி மயிர்வெட்டு, குலைமுட்டி, புடையன், விரியன் முதலிய விஷக்குஷ்டங்களும் கனை, இருமல், தொண்டைக்கட்டு, கீச்சுக்குரல், அதிமூச்சு, ஆள்ரூபசதை மாற்றி வேற்றுமைப் படுத்தும் மகாகுஷ்ட ரோகங்களெல்லாம் மாயமாக பறந்துவிடும்.

24-வேளை சுன்னம் விலை ரூபா 25. 12-வேளை சுன்னம் விலை ரூபா 13.
(அனுபானத்துடன்)

குறிப்பு:— அன்னிய நாட்டினர் முழுத்தொகையும் முன்பணமாக அனுப்பவேண்டியது. கடிதம் எழுதுவோர் தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவேணும். கேட்லாக் இனும்,

உலகரக்ஷகன் ஆசிரியர்:—

எம். கந்தசாமி பிள்ளை,

இந்திய மஹரிஷிகள் வைத்தியசாலை பழனி S. I.

13-ம் வருடம் பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது

"ஆனந்தபோதினி".

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.
48-பக்கங்களில் உயர்ந்த வியாசங்களுடன் வெளிவருவது.
தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.
13-வருடங்களாக நடைபெற்றுவருவது
20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது.
இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
பினங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு
வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனும்.
விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்

அதிவெகு ஆச்சரியம்.

ஆரூடம்:— தர்ம ஞானமான கேள்விகளை எழுதி அனுப்பினுல் பரப்பிர்மம் சொரூபியான ஸ்ரீ தண்டபாணி கடவுளின் அருள் வாக்கியத்தால் தருந்த பதில்கள் எழுதி அனுப்பப்படும். கேள்விகள் 6-க்கு ரூபாய் ஒன்று. மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணு நான்கு. தபால் சிலவு வேறு. இன்னும் வேறும் விஷயங்களுக்கும் எழுதி தெரிந்து கொள்ளவும். அன்னிய நாட்டு வாசிகள் முன்பணம் தபால் சிலவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமணிய உபாசி
பழனி. Palni P. O. (S. I.)

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு $3\frac{1}{2}$"x $2\frac{1}{2}$" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்



பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேடலாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

திருப்பூர்
சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கணித சோதிடம்

பாகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மவகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனும்! இனும்!! இனும்!!!

பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளு, வயலெட, கருப்பு, செம்பு. ஸ்நப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான வசீகரத்தோற்றமுள்ளது.

$2\frac{3}{4}$ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0
5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின
ஸில்க் அங்க வஸ்திரம் ... ... ரூ. 4—8—0
$2\frac{3}{4}$ அகலம் $7\frac{1}{2}$ முழம் அழுத்தமான கை
நெசவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனும்!

The Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA

ஸ்ரீமத் நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.